Registered as a Newspaper

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/.

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

கா: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆவணி ௴ 12 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 14 ( 28 - 08 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 168

## தபாலக ஊழியர் நேற்று கடமையில்

யாழ்ப்பாணம் ஆக 28

யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலைய ஊழியர் கள் நேற்றைய தினம் வழமை போலக் கடமை களில் ஈடுபட்டனர்

கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை சைக் கிள் நிறுத்துவது சம்பந் தமாக தபாலக ஊழி யருக்கும் அமைதிப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட தக ராறு காரணமாக அவர் கள் கடமைகளைப் பகிஷ் கரித்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-9)

## நேற்றும் உண்ணவிரதம்

யாழ்ப்பாணம், ஆக. 28

வடக்கு கிழக்கு பிர ஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுவின் ஏற் பாட்டில், சுழற்சி முறை யிலான உண்ணவிரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

மேற்படி இணைப்புக் குழுவின் சார்பிலும், அலையர் முன்னணி யின் சார்பிலும் விடுவிக் கப்பட்ட கைதிகளின் சார்பிலும் சிறையில் உள்ளவர்களின் சார்பி லும் பலர் இந்த உண்ண விரதத்தில் கலந்து கொண்டனர்.

இன்றும், மூன்ருவது நாளாக சுழற்சி முறை யிலான உண்ணவிரதம் தொடர்ந்து நடை பெறும் என்று அறிவிக் கப்பட்டது. (ஒ-க-9)

## 7 போராளிகள் மரணம்

கொழும்பு, ஆ 28

வடக்கு இலங்கையில் இடம் பெற்ற மூன்று வெவ்வேறு துப்பாக்கிச் சண்டைகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தின் 7 போராளிகளை இந்திய அமைதிப்படை யினர் சுட்டுக் கொன்ற தாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரி வித்தது.

வெரித்தாஸ் வானொலி இதனை நேற்றுஇரவு அறி வித்தது. (ஒ-எ)

## யாழ்—கொழும்பு மினிபஸ்களும் சேவையில்

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ்ப்பாணம்-கொழு ம்பு போக்குவரத்துச் சேவையில் நேற்று மினி பஸ்களும் ஈடுபட்டன.

கடந்த சில நாட்க ளாக அமைதிப்படையி னரின் சட்டணத் தரப் படுத்தல் காரணமாக யாழ்ப்பாணம்- கொழு ம்பு சேவையில் ஈடுபடும் அனைத்து பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப் படவில்லை,

எனினும் வெள்ளிக் கிழமை முதல் பெரிய பஸ்கள் சேவையில் ஈடு பட்டன.

இதனை அடுத்து நேற்று முதல் மினி பஸ் களும் சேவையில் ஈடுபட் டன.

நேற்று, பெரிய பஸ் கள் 110 ரூபாவும், சிறிய பஸ்கள் 100 ரூபாவும் சட்டணங்களாக அற விட்டன. (ஒ-10)

# வன்னியில் 12 நாட்களாக தொடர்ந்து மோதல்

## வெள்ளியன்று மாங்குளத்தில் படை முகாம் மீது தாக்குதல்

லண்டன், ஆகஸ்ட் 27

**இலங்கையில் வட பகுதியில், வன்னிக் காடுகளில் கடந்த 12 நாட்களாக இந்தியப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.**

இத்தகவலை பி. பி. சி. தமிழோசை ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டது மாங்குளத்தில் இந்தியப் படை முகாம் மீது கடந்த வெள்ளிக்கிழமை, போராளிகள் நடத்திய திடீர் தாக்குதலில் கேர்ணல் இராமன் என்ற உயர் அதிகாரியும், ஒரு ஜவானும் இறந்ததாகவும் அறிவிக்கப்பட்டது,

இந்தியப் படையின ருக்கும் போராளிகளுக் கும்இடையே இம்மாதம் 15 ஆம் திகதி தொடக் கம் கடும் மோதல்கள் நடந்து வருகின்றன.

வெள்ளிக்கிழமை மாங் குளத்தில் உள்ள இந் திய அமைதிப்படை முகாம் ஒன்றின் மீது போராளிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அமைதிப்படையின் மூத்த அதிகாரி ஒருவ ரும், ஜவான் ஒருவரும் உயிரிழந்தனர்.

மாங்குளம் தாக்குத லில் உயிரிழந்த இந்திய அமைதிப்படை மூத்த அதிகாரியின் பெயர் கேர்ணல் இராமன்.

அமைதிப்படை முகா மைக் காவல் பார் த்துக் கொண்டு நின்ற ஜவானைச் சுட்டு விட்டு விடுதலைப்புலிகள் இயக் கப் போராளிகள் முகா முக்குள் நுழைந்து கேர் ணல் இராமனைச் சுட்டுக் கொன்றுர்கள்.

இம்மாதம் 15 ஆம் திகதியில் இருந்துஇடம் பெற்றுவரும் மோதல்க ளில் தாங்கள் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த 40 வீரர்களைக் கொன்றிருப்பதாகவும் தங்களில் 31 உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருப் பதாகவும் தமிழீழ விடு தலைப் புலிகள் இயக்கத் தினர் தெரிவித்ததாகக் கொழும்பிலுள்ள பி பி சி. செய்தியாளர் கிறிஸ் நட்டால் அறிவித்திருக் கிருர்.

—இவ்வாறு பி பி.சி. தமிழோசை செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

## முல்லைத்தீவிலிருந்து மக்கள் நாளாந்தம் வவுனியாவிற்கு இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக 28

முல்லைத்தீவு மாவட் டத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் வவுனியா மாவட் டத்துக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிய வருகிறது.

முல்லைத்தீவு மாவட் டத்தில் கடந்த திங்கட் கிழமை முதல் அமுல் படுத்தப்பட்ட ஊரடங் குச் சட்டம் தளர்த்தப் படாதபோதிலும்மக்கள் கால் நடையாக நாளாந் தம் வெளியேறிக் கொண் டிருக்கின்றனர்.

அகதிகளாகச் சென்ற அனைவரையும் வவுனியா விலுள்ள பொதுஸ்தாப னங்கள் கவனித்து வரு கின்றன.

இவர்கள் பாடசாலை களிலும், வேறு அரசாங்க கட்டடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை முல்லைத் தீவு மாவட்டத்தின் கிரா மப்புறங்களில் இருந்தும் படையினர் தாக்குதல் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாகவும் வவுனியாவில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-10)

## தூதுவர் டிக்ஸிற்றை வவுனியாவுக்கு வருமாறு இ. தொ. கா. தந்தி

வவுனியா, ஆக. 28

இந்தியத் தூதுவர் திரு. ஜே என. டிக் ஸிற்றை வவுனியாவுக்கு விஜயம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதி திரு மருதப்பிள்ளை அவ சரத் தந்தி ஒன்றின் மூலம் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

வவுனியாவிலுள்ள வங் கிகள் மூடப்பட்டதை அடுத்து அங்குள்ள மக் கள் எதிர்கொண்டுள்ள நஷ்டங்களையும் மற்றும் அவர்களது குறைகளை யும் நேரடியாக அவரி டம் எடுத்துக் கூறுவதற் காகவே அவருக்கு இந்த அவசர அழைப்பு விடுக் கப்பட்டிருக்கிறது.

இதே வேளையில், இ. தொ. கா. பொதுச் செயலாளர் திரு. எம். எஸ் செல்லச்சாமி. இந் தியத் தூதுவரைச் சந் தித்து வவுனியா மக்கள் எதிர்கொண்டுள்ள கஷ் டங்கள் குறித்து அவ ருக்கு விரிவாக எடுத்துக் கூறவேண்டும் என்றும், இந்த விஜயத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும் கோரி மற்ருெரு தந்தி திரு. செல்லச்சாமிக்கு அனுப்பிவைக்கப்பட்டி ருக்கிறது. (ஒ-ஐ)

## முச்சந்தி முரளி



பூஸாவிலே கைதியள் உண்ணவிரதம் ஆரம் பிச்சு 14 நாட்களும் கடந்துபோச்சு ஆனல் அதி உத்தமர் தரப்பிலை ஒரு அசைவையும் காண யில்லையே......!

### ● இப்படியும் ஒரு பணிப்பு

இந்திய அமைதிப் படையினர் காரைநகரி லுள்ள சில வீட்டு உரி மையாளரையும் தங்கள் பெயர், விலாசம் என் பனவற்றை எழுதி பட லையில் தொங்கவிடும்படி பணித்துள்ளனர் என அறியவருகிறது.

மேலும் குடும்ப அங் கத்தவர்களுடைய புகைப்படப் பிரதிகளை யும் தருமாறு அவர்கள் கேட்டுள்ளனராம்.

## 2 வார இடைவெளியின் பின்

# மீண்டும் யாழ்நகர் வந்தது கொழும்பு ரயில்!

யாழ்ப்பாணம், ஆக. 28

கொழும்பில் இருந்து புறப்பட்ட ரயில் இரண் டரை மணிநேரம் தாம தமாகவே நேற்று யாழ்ப் பாணம் வந்து சேர்ந் தது.

ரயில் வவுனியா வந்த பிறகே அதை யாழ்ப் பாணத்திற்கு அனுப்பு வதா இல்லையா என்று முடிவு செய்யப்பட்டத னலேயே இந்தத் தாம தம் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது.

வெள்ளி இரவு சுமார் 11-30 மணியளவில் கொழும்பில் இருந்து புறப்பட்ட ரயில் சனிக் கிழமை காலை சுமார் 5-45 மணிக்கு வவுனியா வந்து சேர்ந்ததாம்.

ஆனல் 9-30 மணி வரை எந்த அறிவித்த லுமின்றி ரயில் அங்கு நிறுத்திவைக்கப்பட்டி ருந்தது

பின்னர் ரயில் யாழ் செல்லாது என்று அறி விக்கப்பட்டதாம் இத ஞல் ரயில் யாழ். வரும் என்று நினைத்து பெரிய பொதிகளுடன் வந்தி ருந்த பயணிகள் அவற் றையும் சுமந்துகொண்டு பஸ்நிலையம் சென்றனர்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சரக்கு ரயிலும் வந்தது!

சரக்கு ரயில ஒன்றும் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

இந்த சரக்கு ரயிலில் பெற்ரேல். டீசல். மண் ணெண்ணெய் என்பன வும் கூட்டுறவு மொத்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

28 - 08 - 88
ஆவணி — 12
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09.05முதல் 10 35வரை
ராகுகாலம்:
04 35முதல் 06 05வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ஆதரவு தெரிவித்து அடையாளமாக

# பூஸாவில் கைதிகள் அனைவரும் உண்ணவிரதம்

யாழ்ப்பாணம், ஆக 28

பூஸா தடுப்பு முகா மில் சாகும்வரை உண்ண விரதம் மேற்கொண்டி ருப்போருக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக அனைத்துக் கைதிகளும் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணவிரதம் மேற் கொண்டனர்.

பூஸா தடை முகாமில் தடுத்துவைக்கப்பட்டி ருக்கும் அரசியற்கைதி கள் தம்மை விடுதலை செய்யக் கோரி சாகும் கட்ட சாகும் வரையி லான உண்ணவிரதப் போராட்டத்தை 14ஆம் திகதியும், இரண்டாம் கட்டப் போராட் டத்தை 21 ஆம் திகதி யும் ஆரம்பித்து நடத்தி வருவது தெரிந்ததே.

இதேவேளை கடந்த 15 ஆம் திகதி பூஸா சிறைச்சாலையின் இரண் டாவது நிர்வாக அதிகா ரியான இராணுவ கப் டன் விஜேய விக்கிரம பூஸா தேசிய குற்றப் புலனாய்வுப் பகுதிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுவெடிப்பு

பஞ்சாப் மாநிலத்தில் அமிர்தசரஸில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். 26 பேர் படுகாயமடைந்த னர்.

## யாழ். தபாலகத்தில் வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே 'மணிஓடர்' மாற்ற முடியும்

யாழ்ப்பாணம், ஆக. 28

கடந்த வாரம் முதல் யாழ்-தபால் நிலையத்தில் செவ்வாய், புதன், வியா ழன் ஆகிய நாட்களில் மட்டுமே காசுக்கட்டளை (மணியோடர்) மாற்று தல், பெறுமதிவாய்ந்த முத்திரைகளை விற்றல் என்பன போன்ற பணப் பெறுமதி கூடியநடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்திய அமைதிப் படையினர் பிரஸ்தாப தினங்களில் மட்டுமே பிரதம தபாலகத்திற்கு பாதுகாப்பு வழங்க முடி யும் என அறிவித்ததை அடுத்தே இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

அண்மையில் பிரதம

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ● 11 சிங்களவர்கள் கொலை

அம்பாறை மாவட் டத்தில் மாஓயா என் னுமிடத்தில் 11 சிங்கள வர்கள் இனந்தெரியாத வர்களினுல் கொல்லப் பட்டனர் என்று தெரி விக்கப்பட்டது.

விறகு பொறுக்கச் சென்ற இடத்தில் இவர் கள் கொல்லப்பட்டனர் என்றும்-

தகவல் கிடைத்து இலங்கை இராணுவத் தினர் அந்த இடத்திற் குச் சென்று சடலங்களை மீட்டெடுத்தனர் என் றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## மீன்பிடித் தடை: அமைதிப் படையின் அதிகாரியுடன் பேச்சு

குருநகர். ஆக 28

இரவு நேர மீன்பிடித் தலுக்கு தடை செய்துள் ளமை. மற்றும்-

சிறுகுவலை,களங்கட்டி, படகுபோன்றவைய கடல் தொழில்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடு களைத் தளர்த்தக் கோரி நேற்று குருநகர் மீனவர் களின சார்பாக அவர் களது பிரதிநிதிகள் அமைதிப்படையுடன் பேச்சு நடத்தினர்.

குருநகர் பகுதிமீனவர் கள் சங்கங்களின் பிரதி நிதிகள் குருநகர் இந்திய அமைதிப்படை முகா முக்குச் சென்று பொறுப் பதிகாரிமேஜர் ஆனந்து டன் கலந்துரையாடினர்.

கடற்தொழிலாளர் பிரதிநிதிகளின் வேண்டு கோளைக் கேட்டறிந்த பொறுப்பதிகாரி இரண் டொரு தினங்களில் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு நாளாந்தம் குறைந் தளவு எண்ணிக்கையான வர்கள் மீன்பிடிக்கச் செல்வதற்கு அனுமதி பெற்றுத் தருவதாகத் தெரிவித்ததாகக் கூறப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆம் திகதி திறக்கப்படும்

கொழும்பு, ஆக 28

தென் இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங் கள் அனைத்தும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட் டது.

பல்கலைக் கழக மாண வர்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்றும்;—

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி பல்கலைக் கழ கத்துக்குச் செல்லாமல் இருக்கும் சில மாணவர் கள் தொடர்பாக அந் தந்தப் பல்கலைக் கழகங் களே முடிவுசெய்ய வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட் டது. (ஒ-எ-க)

## இன்றும் ரயில் வரும்

யாழ்ப்பாணம், ஆக28

இன்றும் பயணிகள் ரயில் ஒன்று யாழ்ப் பாணம் வந்துசேரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முந்திய ஏற்பாட்டின் பிரகாரம் வாரத்தில் இரண்டு நாட்கள்—அதா வது சனி, ஞாயிறு தின ங்களில் ரயில் யாழ்ப்பா ணம் வரும். (ஒ-க)

## இந்திய பஸ்கள் வந்தன

கொழும்பு, ஆக 28

இந்தியாவில் இருந்து 55 பஸ்கள் கொழும்பு வந்து சேர்ந்துள்ளன.

இந்திய உதவித் திட் டத்தில் இருந்து கிடைக் கும் 155 பஸ்களில் இந்த 55 பஸ்கள் முதற் தொகுதியாகும்.

இவை இலங்கைப் போக்கு வரத்துசபைக்கு வழங்கப்பட்டு கொழும் பில் சேவையில் ஈடுபடுத் தப்படும் எனத் தெரிவிக் கப்பட்டது. (ஒ-க)

## டிக்கெட் வழங்கப்பட்டது

நேற்று ரயிலில் பய ணம் செய்தவர்களுக்கு வழமையாக வழங்கப் படுவது போல 'டிக் கெட்டுகள்' வழங்கப்பட் டன.

இம்மாதம் முதல் வாரத்தில் ரயில்சேவை நடைபெற்றபோது பற்றுச்சீட்டே வழங்கப் பட்டது. (ஒ)

பணிப் பெண்கள் தேவை
வயது: 20க்கும் 35க்கும்
இடைப்பட்டவர்கள்
சிங்கப்பூருக்கும் - கனடாவுக்கும்
சம்பளம்: Rs. 2.800/-, Rs. 3.800/-
பாஸ்போட் சகிதம்
கீழ்க்காணும் விலாசத்தில்:
28 - 08 - 1988 ஞாயிற்றுக்கிழமை
காலை 10-00மணிக்கும்
மாலை 4-00 மணிக்கும் இடையில்
சந்திக்கவும்.
தற்போது பணம்
வசூலிக்கப்படமாட்டாது.
A. T. அலோய்
713, ஆஸ்பத்திரி வீதி,
(ஆஸ்பத்திரி ரோட்
உப தபாற்கந்தோர் அருகாமையில்)
யாழ்ப்பாணம். (6053)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1½ மாதப் பெடிகிறி அல்சேஷன் நாய்க்குட்டிகள் (Wormed and Weaned) தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: V. K. திருநாவுக்கரசு, ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு- (ஸ்ரீ முருகன் பேக்கரிக்கு அருகாமையில்) (6060)

Goldi Sausages, Beef, Chicken, Fish, Mutton Pork, Beef Hot Dogs, Frank furters, Lingus, Powkies, Chicken, Meet balls, Beef Meet Balls, Streaky Bacon, Back Bacon, Special Bacon Ham மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் விடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர் (C/6062)

புதிய நஷனல் RX-C-39 36W 3 Band Graphic Equalizer Stereo Component System உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 70, புங்கங்குளம் ரோட், கொழும்புத்துறை. (C 6059)

அல்சேசன் இனத்தைச் சேர்ந்த நன்றியுள்ள பிராணியின் 1/2 மாத ஆண்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. Pedigree available தொடர்பு: அன்பகம், இராசவீதி, சட்டநாதர் கோவிலடி, நல்லூர். (C6055)

ஒருநாள் கோழிக்குஞ்சு 01--09--88ல் லோமன் (சிவப்பு) 05-09-88ல் ஹைலைன் (வெள்ளை) ஆகிய இனக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். தேவையானவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும் யாழ்ப்பாணத்தில் ஈஸ்ரன் ரேடர்ஸ் 95/2 ஸ்டான்லிவீதி, சரவணா ரேடர்ஸ் 174 ஸ்டான்லி வீதி, மானிப்பாயில் ஜீவன் மத்திய சந்தை, மானிப்பாயிலபெற்றுக் கொள்ளலாம். (C6056)

சுன்னாகத்தில் மூன்று பரப்புக காணி வீடு வளவு நான்கு படுக்கை அறைகளைக் கொண்ட சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V. மகேந்திரன், 32, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (C 6057)

பெரிய 2 கதவு குளிர்சாதனப்பெட்டி கடைப் பாவனைக்கு உரியது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிகஸ் சந்தியருகில்.) (5994)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, அலுமாரி, கட்டில், Show - Case, கண்ணாடிமேசை, Office மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், விருந்தைக் கதிரைகள், பலவித பித்தளைப் பொருட்கள், Steel அலுமாரி, மெற்றல் கதிரைகள் மற்றும் பலவிதமான பொருட்களும் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென். பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5995)

யாழ். கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3 அறைகளுடன் ஒரு வீடு. உடுவில் மானிப்பாய் வீதியில் 3 பரப்பில் புதிய வீடு விற்பனைக்குஉண்டு. தொடர்பு: J.P.T. 3, Model Market, (Upstairs) Jaffna. (5948)

### D. FREEZER விற்பனை

புத்தம்புதிய D.Freezer சிறியது விற்பனைக்குண்டு உடன் தொடர்பு கொள்க. Yarltan-Stores, 119, K. K S. Road, Kokuvil (5950)

### முட்டை விற்பனை

முட்டை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- (1)சிமாட்டி பாம், ஸ்ரேசன் ரோட், மயிலன் காடு, சுன்னாகம்; (2) சிமாட்டி, பான்ஸிகவுஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம். (5934)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

### மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No. 1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

## தேவை

ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண் உதவியாளர் தேவை. ஓரளவு தையல் அனுபவம் உள்ளவர்களும், யாழ்நகரின் இரண்டு மைல் சுற்றுடலில் வசிப்பவர்கள் உடன்தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் 3 - 9 - 88 ஆம் திகதி சனிக்கிழமை நேரில் வரவும். சிற்றி என்ரபிரைசேஸ், (மேல்மாடி) 198 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (5949)

### வேலைக்கு ஆள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள "பென்ஸி நட்ஸ்" ஸ்தாபனத்தில் வேலை செய்யவயது 12-15 க்கும் உட்பட்ட பையன்கள் தேவை. தொடர்பு:- 348. C/o உதயன், யாழ்ப்பாணம். (6201)

### பெண் ஆசிரியை தேவை

6 ஆம் ஆண்டு மாணவனுக்கு வீட்டில் வந்து, விஞ்ஞானம், கணிதம்-(Maths), ஆங்கிலம், தமிழ் படிப்பிக்க A/L O/L சித்தியடைந்த பெண் ஆசிரியர் தேவை. தனித் தனிப்பாடங்களுக்கோ இரண்டு மூன்று பாடங்களுக்கோ வருபவர்களும் விரும்பப்படுவார்கள். நியாயமான ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும். திருமதி S. R. விஜயரத்தினம், 53, கோவில் வீதி (புகையிரதவீதிக்கருகில்) யாழ்ப்பாணம். (6000)

### மணமகன் தேவை

இந்து வேளாளர் குல வயது 30 முதல் 43வரையுள்ள டாக்டர்கள், என்ஜினியர்கள், பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், வெளிநாட்டில் தொழில்புரிவோர், தாரமிழந்தோர், சைவ போசனம் அருந்துவோர்களுக்கு ஏற்ற பெண்கள் இருக்கிறார்கள். நேரில் வந்து பதியுங்கள். ஸ்ரீகரன், பலாலி வீதி, திருநெல்வேலி. (வைத்திலிங்கம் மர ஆலைக்கு அருகில்) (5998)

### மணமகள் தேவை

இந்து வேளாளர் குல 36 வயது செவ்வாய்க் குற்றமற்ற அச்சுவினி நட்சத்திர, கனடா குடியுரிமையுள்ள Computer Technician க்கு அழகான 26 வயதுக்கும் 30 வயதுக்கும் இடையிலுள்ள I. C. M. A., Computer, Typing படித்த பெண் தேவை. நேரில் வரவும் ஸ்ரீகரன் பலாலி வீதி, திருநெல்வேலி. (5999)

### பிரெஞ்ச் மொழி

1988 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட "பிரெஞ்ச் மொழி" வகுப்புக்கள் சலுகைக் கட்டணத்தில் 1- 9 · 88 இல் ஆரம்பமாகின்றன. விபரங்களுக்கு:- "Alliance Francaise De Jaffna" (யாழ்/ பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம்) 130, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [5929]

### German Language

வெளிநாட்டில் உயர் கல்வி படிப்பை தொடருபவர்களுக்காக, வகுப்புக்கள் 16-9-88ல் ஆரம்பமாகவுள்ளது. இப்பாஷையுடன் சம்பந்தப்பட்ட மொழிபெயர்ப்புகளும் மேற்கொள்ளப்படும். தொடர்பு; Mr.Sabanayagam, German Language (Teacher) 'Rudi Cot, 33, Kandy Road, Jaffna. (C 6426)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் யாழ் மாவட்டத்தில் உள்ள வீடுகளில் வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். தனித்தனியாகவோ, சிறுகுழுக்களாகவோ வயது வித்தியாசமின்றி ஆண், பெண் இருபாலாருக்கும் தத்தமது முகவரியை மாத்திரம் அனுப்பி வைக்கவும். தொடர்பு: 347, C/o உதயன். யாழ்ப்பாணம். (5945)

### யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற்

எங்கள் ஸ்தாபனம் தினசரி பிற்பகல் 5. 30 வரை திறந்திருக்கும். தங்குமிட வசதியும் உண்டு. யாழ். சைனீஸ் றெஸ்ரோறென்ற் பிறைவேற் லிமிட்டெட் முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (5917)

### DIPLOMA IN NURSING தாதியர் பயிற்சி

இரண்டாம் பிரிவு வகுப்புக்கள் தகுதிவாய்ந்த டாக்டர்களினால் செப்டம்பரில் ஆரம்பம். விபரங்களுக்கு:- எலைற் ரியூசன் சென்ரர், மானிப்பாய் அல்லது நவீன வைத்தியசாலை உடுவிலில் காலை 9முதல் 11 மணிவரை தொடர்பு கொள்ளவும். (5954)

### பட்டதாரி மணப்பெண் தேவை

யாழ். இந்து வேளாளர் குல, B Sc. பட்டதாரிக்கு, 33 வயதிற்கு உட்பட்ட நற்பண்பு அழகுடைய தொழில் புரியும் விஞ்ஞான/கலைப்பட்டதாரி, அல்லது கணக்கியல், சம்பியூட்டர் துறையைச் சார்ந்த மணப்பெண் தேவை, சீதனம் நேரில் கதைத்துக் கொள்ளலாம். தொடர்பு: 333, C/o உதயன், யாழ்ப்பாணம். (5912)

### புங்குடுதீவில் சிறுவர் பராமரிப்பு நிலையம்

புங்குடுதீவு ஆக 28 புங்குடுதீவில் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதினத்தின் ஆதரவில்- புங்குடுதீவு திருச்சபையின் இல்லத்தில் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு சிறுவர்களுக்குக் கல்வியும் மதிய போசனமும் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-131)


புதிய மெருகுடன் புதியதோர்

## சைனீஸ் இன்ஸ்

வன்னி நகரின் மத்தியில் முதன் முறையாக நவீன பாணியில் உங்களுக்குச் சேவை புரிய

**CHINESE INNS**

உங்களைத் திருப்திப்படுத்த ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் தரம், சுவை மற்றும் தனிச்சிறப்பு குறைந்த விலை இவை யாவற்றுக்கும் நாட வேண்டிய முகவரி:

**CHINESE INNS**

Kandy Road, VAVUNIYA. (6023)


### யாழ்ப்பாணக் கல்லூரி
## புதிய மாணவர் அனுமதி-1989

பின்வரும் வகுப்புக்களுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்

**முதலாம் வருடம்:** 31-1-84க்கு முன்னும் 31-1-83 க்குப் பின்னும் பிறந்த பிள்ளைகளே சேர்க்கப்படுவர்.

**ஆறும் வருடம்:** 31-1-78க்கு பின்னர் பிறந்த பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர்.

**பன்னிரண்டாம் வருடம்:** 31-1-72 க்கு பின்னர் பிறந்த பிள்ளைகள், க.பொ.த. (சா) பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

கல்லூரிக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 30-9-88க்கு முன் சமர்ப்பிக்கவும்.

ஆறும் வருட மாணவர்களுக்குப் புகுமுகத்தேர்வு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

முதலாம் வருட மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நவம்பர் மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும்.

அதிபர்.

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை. (C6434)

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் (29 - 08 - 1988) திங்கள் பகல் 1 மணி 38 நிமிடம் முதல் 3 மணி 34 நிமிடம் வரை வரும் தனு இலக்கின

★ சுப முகூர்த்த சுப வேளையில் ★

| எங்கள் புத்திரன் | எங்கள் புத்திரி |
| --- | --- |
| **டாக்டர் M. மனோகர்** M. B. B. S. (Sri Lanka) அவர்களுக்கும் | **தாக்ஷாயினி, B. Sc.** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அச்சமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகம் அளித்து தம்பதிகளை ஆசிர்வதிக்குமாறு

★ அன்புடன் அழைக்கின்றோம். ★

| | |
| --- | --- |
| திரு. திருமதி மு. பொ. மகாதேவன் (துறைமுக அதிகார சபை) பிரதான வீதி, 1 ஆம் கட்டை, பருத்தித்துறை. | திரு. திருமதி வ. இராசரத்தினம் (உரிமையாளர்;-N. A. மார்க்கண்டு & பிரதர்ஸ்) வல்வெட்டித்துறை, 14, உவர்மலை மத்திய வீதி, திருமலை. |

★ இவ்வண்ணம் உங்கள் நல்வரவை நாடும் ★

★ திரு. திருமதி மா. வ. மாணிக்கராசா ★

(6054)

உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 13 ஆம் நாள் (29 - 08 - 88) திங்கட்கிழமை பிற்பகல் 1 . 38 முதல் 3 . 34 மணி வரை உள்ள சுப முகூர்த்த

★ வேளையில் ★

| எமது புத்திரன் | எனது புத்திரி |
| --- | --- |
| திருவளர் செல்வன் கிருஷ்ணசாமி **பாலேந்திரன்** அவர்களுக்கும் | திருவளர் செல்வி சுப்பிரமணியம் **கிருபாலினி (கிருபா)** அவர்களுக்கும் |

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 211/2 இல் உள்ள இல்லத்தில் திருமணம் செய்ய பெற்றோர்கள் நிச்சயித்திருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம். ★

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும் ★

| | |
| --- | --- |
| திரு. திருமதி து. கிருஷ்ணசாமி லக்ஷ்மி பவான் பருத்தித்துறை. | திரு. சுப்பிரமணியம் (நடேசு) பாபு குட்லக் எம்போறியம் பருத்தித்துறை. |

★ தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை ★

(6030)

### நன்றி நவிலல்

19—8—88இல் நடந்த எங்கள் திருமணத்திற்கு வருகைதந்தவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியவர்கள், அன்பளிப்புக்கள் செய்தவர்கள் எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. மு. மதியாபரணம்
திருமதி ம. புவனேஸ்வரி

உரும்பிராய் தெற்கு, உரும்பராய். | ஊரங்குணை, ஏழாலை.

(C 6027)


## பிரயாண ஒழுங்குகள்

GOLDEN TRAVELS & TOURS

## SAUDI ARABIA

1. ஓட்டோ எலக்றிசன் 650 + 150 FA
2. ஓட்டோ மெக்கானிக் 650 + 150 FA
3. Gen. Electrician 750 + 150 FA
4. Civil Supervisor 900 + 200 FA
5. Work Scheduler 1100+100 FA
6. H v a c Split Units/ Central Technicians 900 - 1000 + 100 FA
7. A.C. Technicians 700-800+100 FA
8. Appliances Technicians 800+100 FA

## SINGAPORE

கார் திருத்துனர் 500 S.Dollar (O.T. உண்டு)

ஒப்பந்தம் 2 வருடம்

SHIP: சரக்குக் கப்பலில் வேலை வாய்ப்புக்கள் (கிரேக்கக் கப்பல்)

சம்பளம்: 500 U.S. Dollar

ஒப்பந்தம்: 1 வருடம்

**முற்பணம் அறவிடப்படமாட்டாது.**

பிரயாணம் செய்யக் கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத்தவறின் கடவுச்சீட்டுத் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் திறக்கப்படும்.

தலைமைக் காரியாலயம்:-

## கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ் குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை 2: கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ் வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6415)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் புதியதோர் இயக்கம்

யாழ்ப்பாணம் ஆக 28

மட்டக்களப்புப் பகுதியில் "3 தோழர்கள்" (THREE FRIENDS) என்ற புதியதொரு அமைப்பு உருவாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்தியப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி அமைப்பின் முக்கிய பிரமுகர் உட்பட 6 பேர் அண்மையில் கொள்ளை, பணவசூல் செய்வதில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில்கைது செய்து இந்தியப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டு பிரஜைகள் குழு மூலம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டு வருகிறது.

சில தீவிர வாத குழுக்களில் இருந்து விலகியவர்கள், விலக்கப்பட்டவர்கள் தான் மேற்படி அமைப்பில் அங்கம் வகிக்கிறார்கள் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ- 21)

## மாவட்ட ஆசிரியர் வேறு பகுதிகளுக்கும் நியமனம் பெற வாய்ப்பு

கொழும்பு, ஆக 28

மாவட்ட அடிப்படையில் ஆசிரிய நியமனம் பெற்றவர்கள் வேறு மாவட்டங்களில் ஆசிரிய நியமனங்களைப் புதிதாகப்பெற அனுமதிப்பது என்று அமைச்சரவை தீர்மானித்து உள்ளது.

மாவட்ட அடிப்படையில் சேவை செய்த காலம் புதிய நியமனத்தின் பின்னரும் சேவை மூப்பு அட்டவணையில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

மாவட்ட அடிப்படையில் 4 வருடங்கள் (இக்காலத்தில் 3 ஆண்டுகளை கஷ்டப் பிரதேசத்தில் சேவை யாற்றி இருக்க வேண்டும்) பணி புரிந்தவர்களே, ஏனைய மாவட்டங்களில் ஆசிரிய நியமனம் பெறத் தகுதியுடையவர்கள் என்று கல்விச் சேவை ஆணைக் குழு அறிவித்திருக்கின்றது.

இந் நியமனங்களைப் பெற விரும்புவோர் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கல்விச் சேவை ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப் படுகிறது. (ஒ-எ)

## வேகத்தினால் பாதிப்பு

கோப்பாய், ஆக. 28

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியில் செல்லும் மினிபஸ்களின் வேகத்தினால் வீதியில் செல்பவர்கள் பெரிதும் அவதியுற வேண்டியுள்ளது.

ஒன்றையொன்று துரத்திக்கொண்டு வரும் மின் பஸ்களுக்கு இடையில் அகப்படும் சைக்கிள் ஓட்டிகள் வீதியைவிட்டு வெளியே சைக்கிளை விட்டே குதிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

குறுகிய வீதிகளின் வேகத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப் பட்டிருக்கிறது.

(உ-72)

## தபால் சேவை சீரடைந்தது

பருத்தித்துறை. ஆக 28

பருத்தித்துறையிலுள்ள புலோலி கிழக்கு வராத்துப்பளைக் கிராமங்களில் நிலவிய தபால் விநியோகச் சீர்கேடுகள் குறித்து தெரிவிக்கப்பட்ட புகார் மீது உடன் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இது சம்பந்தமாக பருத்தித்துறை பிரதம தபால் அதிபருக்கு வடமராட்சி வடக்கு, கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேசபாவனையாளர்சங்கச்செயலாளர் நன்றி தெரிவித்துள்ளார்.

(உ - 118)

## முடிவுத்திகதி நீடிப்பு

மட்டக்களப்பு. ஆக 28

இலங்கை அதிபர்கள் சேவை தரம் - I, II, III இற்கு வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முடிவுத்திகதி எதிர்வரும் செப்டெம்பர் 6 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கல்விச் சேவைக் குழுவின் பதில் செயலாளர் திரு. ஏ. எஸ் வீரரத்ன மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

ஏற்கனவே ஆகஸ்ட் 31 முடிவு திகதி என அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(உ - 21)

## வடக்கிற்கு இந்திய டாக்டர்கள் வரக்கூடிய சூழ்நிலை இல்லை

### இந்தியத் தூதரகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஆக 28

வட பகுதியில் இந்திய வைத்தியர் குழு சென்று கடமையாற்றக் கூடிய சூழ்நிலை இன்று இல்லை.

எனவே தெல்லிப்பளை புற்றுநோய் சத்திர சிகிச்சை நிலையத்துக்கு இந்தியாவில் இருந்து புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணரைக் கொண்டு வரமுடியாது.

இவ்வாறு இந்திய தூதரகத்தின் முதலாவது செயலாளர் யாழ். ஆஸ்பத்திரிகள் சங்கத் தலைவருக்கு அறிவித்துள்ளார். இதன் பிரதி யாழ் சுகாதாரத் திணைக்கள அத்தியட்சகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் தெல்லிப்பளையில்உள்ள புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ் சுகாதாரத் திணைக்களமும், வடபிராந்திய புற்றுநோயாளர் சங்கமும் தெல்லிப்பளை ஆஸ்பத்திரி சங்கமும் மேற்கொண்டிருந்தன.

இது தொடர்பாக சுகாதார அமைச்சுடனும் இந்தியத் தூதரகத்துடனும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய அமைதிப்படை அதிகாரிகளுடனும் ஏற்கனவே தொடர்பு கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் தெல்லிப்பளை வைத்திய சாலையின் நிலை பற்றி எடுத்துக் கூறப்பட்டதோடு இந்தியாவில் இருந்தாவது புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணரை வரவழைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர் யாழ்ப்பாணத்துக்கு வந்தால் அவரின்பாதுகாப்புக்குத்தாம் உத்தரவாதம் வழங்குவதாக அமைதிப்படை உப அதிகாரிகள் யாழ். சுகாதார அத்தியட்சகரிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும் இப்பொழுது இந்தியாவில் இருந்து சத்திரசிகிச்சை நிபுணரை வடபகுதிக்குக் கொண்டுவரமுடியாது என்றும்-

வேண்டுமானால் வட பகுதியில் உள்ள வைத்தியர்களுக்கும் இந்தியாவில் புற்றுநோய் சத்திர சிகிச்சைப் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும், வைத்தியர்களைத்தெரிவு செய்து அனுப்புமாறும்- இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் எழுதிய பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### சனி பகவான் தோத்திரம்

யாழ்ப்பாணம், ஆ 28

அஷ்டலக்ஷ்மி வெளியீட்டாளர்கள் சனிப் பெயர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக "சனி பகவான் தோத்திரம்" என்னும் நூலை வெளியிட்டுள்ளனர்.

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட இந்த நூல் நல்லை ஆதீனத்தில் உள்ள அஷ்டலக்ஷ்மி புத்தகசாலையில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்,

(ஒ-சி)

## 'எண்ணைக்குதங்களை இந்தியாவுக்கு வழங்குமாறு வாதிட்டவன் நான்'

### 'இந்து' பேட்டியில் அனுரா

கொழும்பு, ஆக. 28

"திருகோணமலையில் உள்ள எண்ணைக் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்க வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாக வாதிட்டவன் நான்."

'இந்து' நாளிதழுக்கு அளித்த பேட்டியில் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

எண்ணைக் குதங்களைக் குத்தகைக்கு எடுப்பதற்கு இந்தியா தெரிவித்த நிபந்தனைகள் இலங்கைக்கு சாதகமானவையாக இருந்தன. ஆனால் இலங்கை அரசோ மோசடிக் கம்பெனி ஒன்றுக்குக் குத்தகையை வழங்கியது.

எண்ணைக்குதம், வொய்ஸ் ஒப் அமெரிக்கா, இஸ்ரவேலியருக்கு இடமளித்தல் ஆகிய விஷயங்கள் குறித்து இந்தியாவுக்கும் எமக்கும் வேறுபாடு இல்லை.

இனப்பிரச்சினை விஷயத்தில் இந்தியாவுக்கு முக்கிய பங்கு உண்டு.

ஆனால் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவதில் காட்டப்பட்ட அவசரம் தான் தற்போதைய பயங்கர நிலைமைக்குக் காரணம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சம்மதமின்றி வடக்கு, கிழக்கில் அமைதி திரும்பாது என்பது தான் உண்மையானது.

—இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

(உ-எ)

## ஈரோஸ் - ஈ. பி. ஆர். எல். எவ் மட்டக்களப்பில் சந்திப்பு

மட்டக்களப்பு. ஆக. 28

மட்டக்களப்பில் ஈரோஸ்—ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கங்களிடையே புரிந்துணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் இரு தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் இந்தியப் படை இணைப்பதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்றது.

இச் சந்திப்பிற்கான ஏற்பாடுகளை பிரிகேடியர் ஐ. எம். தார் மேற் கொண்டிருந்தார்.

ஈரோஸ் சார்பில் பாலா, மேகநாதன் ஆகியோரும் ஈ. பி. ஆர். எல். எவ். சார்பில் நிவாஸ், கணேஸ் ஆகியோரும் பங்குபற்றினர்.

மட்டக்களப்பில் அண்மைக்காலமாக இருதரப்பினருக்குமிடையில் மனக்கசப்பூட்டும் சம்பவங்கள் இடம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-21

## சைவ சமய குருமாருக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம்

### அமைச்சர் இராசு அறிவி பு

யாழ்ப்பாணம், ஆக. 28

சைவ சமய குருமார்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டமொன்று விரைவில் செயற்படுத்தப்படவிருக்கிறது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை சைவ சமய குருமாருக்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபவம் ஒன்றில் பேசுகையில் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

கொழும்பு, கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா, கொட்டாஞ்சேனை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சி. குஞ்சிதபாத குருககள் ஆகியோரைப் பாராட்டும் விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

சமயத்திற்கும், சமூகத்திற்கும் நல்வழி காட்டி அயராது உழைத்துவரும் சிவாச்சாரியர்கள் தமது வயோதிப காலத்தில் வாழ்க்கையை ஓரளவு தன்னம்பிக்கையுடன் நடத்திச் செல்லும் பொருட்டே ஓய்வூதியத் திட்டம் அமுல் செய்யப்பட உள்ளது.

—இப்படி அமைச்சர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தார். (உ-க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 2 லட்சம் செலவில் மல்லாவியில் நூலகம்

## கட்டட வேலைகள் ஆரம்பம்

மாங்குளம் ஆக 28

முல்லைத்தீவு அரசாங்க அதிபரினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினதும் அயராத முயற்சியை அடுத்து மல்லாவிக்கிராமப் பகுதியில் இரண்டு லட்சம் ரூபா செலவில் இப்பகுதி வாசகர்களின் நலன கருதி ஒரு புதிய நூலகம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

மற்றும் துணுக்காய் மாங்குளம் வீதியில் சில குறிப்பிட்ட மூன்று மைல்தூர குன்றுகுழிகள் தார் போட்டு மாற்றும் வேலைகள் முல்லைத்தீவு வீதி அதிகார சபை நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. கே. முத்துக்குமார சூரியரின் பணிப்பின் பேரில், அப்பகுதி வேலைகள், உத்தியோகத்தர் திரு. வி. கமலேஸ்வரன் வேலைகளைத் துரிதப்படுத்திவருகின்றார்.

அத்தோடு புளிமச்சிநாதகுளம் மண் வீதியிலும் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. (ஓ–94)

வடக்கு கிழக்கிற்கு

# 30 இந்திய பஸ்கள் விரைவில் சேவையில்

கொழும்பு, ஆக 28

இரண்டு வாரகாலத்தினுள் வடக்கு, கிழக்கு, மாகாணங்களில்புதிதாக மேலும் 30 இந்திய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

அசோக் லேலண்ட் ரகத்தைச் சேர்ந்த இந்த பஸ்கள் இந்தியாவில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்கப்படவுள்ளன என்று போக்குவரத்து அமைச்சுப் பேச்சாளர் சொன்னார். (ஒ–எ)

திருமலைப் பகுதி

# தமிழ்க் கிராமங்களில் தொடர்ந்து 3 நாட்கள் தேடுதல்

திருகோணமலை ஆக 28

சாம்பல் தீவு, ஆத்திமோட்டை 6ஆம் கட்டை, இலுப்பைக் குளம் போன்ற தமிழ்ப் பகுதிகள் அமைதிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு மூன்று நாட்கள் தொடர்ந்து தேடுதல் வேட்டைகள் இடம் பெற்றன. பலர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திடீர் திடீரென வந்து சேரும் அமைதிப் படையினர் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சுற்றி வளைத்து எவரும் வெளியே செல்லாதவாறும், உள்ளே புகாதவாறும் தடுத்துச் சோதனைகள் மேற்கொள்கின்றனராம்.

ஒருநாள் முழுவதும் எல்லோரும் முகாமில் வைக்கப்பட்டு முகமூடி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டே பின்னர் விடுதலை செய்யப்பட்டனராம்

எவராவது வெளியே செல்வதாக இருந்தால், முகாமிற்குச் சென்று அறிவித்து விட்டுத்தான் வெளியே செல்ல வேண்டும்.

இப்பகுதிகளில் உணவுப் பண்டங்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர், (ஒ 150)

## பல்கலைக்கழக மாணவர் ஆதரவு

யாழ்ப்பாணம், ஆக, 28

வடக்கு, கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவினால் நடத்தப்பட்டு வரும் உண்ணாவிரதப்போராட்டத் திற்கு யாழ்-பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதி ஒருவர் இப்படித் தெரிவித்தார். (ஒ–க)


# சவூதி அரேபியாவிற்கு உடனடி வேலைவாய்ப்பு

1. S. O. M. C
CLEANERS HOSPITAL
( ) ஆண்கள் 456 SR
(2) பெண்கள் 456 SR

2. AIR PORT
CLEANERS 400 + 100 SR
(ஆண்கள்)
வயது 21 — 49 வரை
பெண்கள்
வயது 30 — 45 வரை
இருவாரத்தில் பயணம்

KUWAIT
CLEANERS 30 KD
3 மாதத்திற்குள் பிரயாணம் செய்யலாம்.
வயது 18 — 48 வரை

T. V. TRAVELS & TOURIST
Kokuvil Station (Front)
Brown Road,
KOKUVIL.

(C-6410)


வ. பி. போ. சபையின்

# கோண்டாவில் சாலை நடத்திய 18 உள்ளூர்சேவைகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக 28

யாழ் மாவட்ட எல்லைக்குள் 18 இடங்களுக்கான உள்ளூர் சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில்சாலை நிறுத்தியுள்ளது.

தற்பொழுது உள்ளூர் சேவைகள் பதினைந்து இடங்களுக்கு மட்டுமே நடைபெறுகின்றன.

போதியளவு பஸ்கள் இல்லாததன் காரணமாகவே இச்சேவைகள் நிறுத்தப்பட்டிருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## போதியளவு பஸ்கள் இல்லை!!

— அலுவலகச் செய்தியாளர் அகில்ராஜ் —

இதேவேளை கோண்டாவில் சாலையில் இருந்து தற்பொழுது 47 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுவதாகவும் அவற்றில் பல வெளி மாவட்டங்களில் சேவையாற்றுவதன் காரணமாக உள்ளூர் சேவை ஆரம்பிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சில வீதிகள் பஸ் போக்குவரத்துக்கு உதவாமல் இருப்பதும் பஸ் சேவை நிறுத்தத்துக்கு ஒரு காரணமாகும்.

கோண்டாவில் சாலையில் 25 பஸ்களுக்கு என்ஜின்கள் இல்லாமல் இருப்பதும் வேறு உதிரிப் பாகங்கள் இல்லாமல் இருப்பதும் பஸ் சேவை நிறுத்தப்படுவதற்கு மற்றொரு காரணமாகும்.

முன்னர் சேவையில் ஈடுபட்டு தற்பொழுது நிறுத்தப்பட்டிருக்கும் பஸ் சேவை பாதைகளின் விவரம் வருமாறு:–

768 யாழ்-அளவெட்டியூடாக சங்கானை, 811 சாவகச்சேரி கோப்பாய், மருதனுமடம், 814 யாழ் –ஆனைக்கோட்டை இருபாலை, 772 யாழ்-மல்லாகம் சங்கானை,

798யாழ் – மல்லாகம் பணடத்தரிப்பு. 795யாழ் தெல்லிப்பளை, பன்னாலை, 799 யாழ் – மயிலிட்டி, காங்கேசன்துறை, 808 யாழ் – கோண்டாவில் 769/1 யாழ் – உசன் கிளாலி.

777 யாழ்-ஊர்காவற்றுறை வடக்கு, 779 யாழ் – நாரந்தனை, 778 யாழ் - புளியங்குளம், 792 யாழ் – கிழக்கு அரியாலை, 986 யாழ் - இராசவீதியூடாக அச்சுவேலி.

769/4 யாழ் -கைதடி வடக்கு. 781 யாழ் – மண்டைதீவு, 743 யாழ்-அல்லைப்பிட்டி ஊர்காவற்றுறை, 775 யாழ் – சுன்னாகம் புத்தூர் சாவகச்சேரி.

மேற்கண்ட இடங்களுக்கான பஸ் சேவைகள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக நடைபெறாமல் இருப்பதும்— இவற்றைத் தொடர்ந்து நடத்துமாறு பொதுமக்கள்வேண்டுகோள் விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ–10)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட கமநலச் சேவைகள் உதவி ஆணையாளர் பணிமனைத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இக் கட்டடம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமாகிய திரு. கே. தேவசிகாமணி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

படத்தில் திரு. கே. தேவசிகாமணி உரையாற்றுகிறார். அருகில் கிளிநொச்சி மாவட்ட கமநலச் சேவைகள் உதவி ஆணையாளர் திரு. வே. முருகையாவும் மற்றும் அதிகாரிகளும் காணப்படுகின்றனர், (இ)

# நாட்டைப் பிரிப்பதற்கு எந்தச் சக்திக்கும் இடம் கொடோம்

## அமைச்சர் தேவா சொல்கிறார்:

திருகோணமலை, ஆக.28

நாட்டைப் பிரிப்பதற்கு எந்தச் சக்திக்கும் இடம் கொடுக்கமாட்டோம். இது அரசாங்கத்தின் கொள்கையுமல்ல.

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் கூறினார்.

இம்மாத மத்தியில் திருகோணமலையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் கூறியதாவது:—

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும். எந்தப் பிரச்சினைகள் எழுந்தாலும் நாங்கள் பயந்து விடக்கூடாது. அவற்றை எதிர்கொண்டு செயற்பட வேண்டும். எந்தப் பிரச்சினை எழுந்தாலும் அரசாங்க இயந்திரம் செயற்பட வேண்டும். அப்போதுதான் பாதிப்புக்குள்ளாகும் மக்களுக்கு உடனுக்குடன் பல பணிகளை மேற்கொள்ளமுடியும்.

### மறப்போம் மன்னிப்போம்

தொன்று தொட்டு ஒற்றுமையாகவும் அந்நியோன்யமாகவும் வாழ்ந்து வந்த மூன்று சமூகங்களும் இன்று சின்னா பின்னப்படுத்தப் பட்டுள்ளன. மீண்டும் ஒன்று சேர்த்து வைப்பதற்கு நாங்கள் முயற்சிகளை எடுக்கவேண்டும். நடந்தவைகளை மன்னித்து மறப்போம். இனி நடக்கப்போவதைச் சிந்திப்போம்.

அகதிகளின் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அரசாங் அதிகாரிகள் முக்கிய பங்கெடுத்து செயல்பட வேண்டும். எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளைத் தாமதிக்காது செய்து கொடுக்க அரசாங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்—

இவ்வாறு அமைச்சர் கூறினார். (ஒ–150)

திருடப்பட்ட

# மேலும் 9 சைக்கிள்கள் குருநகர் பகுதியில்மீட்பு

குருநகர், ஆக. 28

குருநகர் பகுதியில் மேலும் ஒன்பது திருட்டுச் சைக்கிள்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

அவைதற்போது புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்சைக்கிள்கள் யாழ் நகரின் ஏனைய பகுதிகளில் திருடப்பட்டு குருநகருக்குள் விற்கப்பட்டனவாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

சைக்கிள் சொந்தக்காரர்கள் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை பணிமனையில் தகுந்த ஆதாரங்களைக் காட்டி சைக்கிள்களைப் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

தினமும் காலை 9மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் சைக்கிள்களை பெற்றுக் கொள்ள உரிமையாளர்கள் சமுகந் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ–51)

## இன்று இசை விழா

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் சங்கீதக் கல்லூரியினது இசை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு சபா மண்டபத்தில் நடைபெறும்.

சபைத்தலைவர் திரு. க. தர்மலிங்கம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

இன்னிசை நிகழ்ச்சிகள் மாணவர்களின் மற்றும் கலை நிகழ்ச்சி [illegible] (உ–இ)

# உடுவில், மானிப்பாயில் அக்குபஞ்சர் சிகிச்சை

மானிப்பாய், ஆக. 28

மானிப்பாய், உடுவில், சங்குவேலிப் பகுதிகளில் உள்ள நோயாளிகளின் நலன்கருதி அக்குபஞ்சர் வைத்திய சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியில் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ். ரி. புவிராசன் அக்குபஞ்சர் வைத்திய முறைச் சிகிச்சையை அளிப்பதற்கு முன் வந்துள்ளார்.

ஆஸ்மா, தொய்வு, காது கேளாமை, வாய் பேசமுடியாமை உட்பட பல நோய்களை அக்குபஞ்சர் வைத்திய சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும் என்றும்–, தம்மால் மேற்கொள்ளப்பட்ட இச் சிகிச்சை முறையில் சிறந்த முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் வைத்தியக் கலாநிதி டாக்டர் எஸ். ரி. புவிராசன் தெரிவித்தார்.

அக்குபஞ்சர் வைத்தியத்துக்காக பெறுமதி மிக்க ஊசி வகைகளை சுவிட்சலாந்திலிருந்து தாம் தருவித்திருப்பதாகவும்–,

இன்னும் சில ஊசி வகைகள் கிடைக்க வேண்டிஇருப்பதாகவும்–

அவை கிடைத்ததும் பூரணமான வைத்திய சிகிச்சையை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (உ – 90)

# பனம் பொருள் உற்பத்தி சம்பந்தமான பயிற்சிக்கு ஐ. நா. புலமைப்பரிசில்

பருத்தித்துறை. ஆக. 28

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் உற்பத்தி, விற்பனை என்பனவற்றில் விசேட பயிற்சி பெற ஐக்கிய நாடுகள் சபையின் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசேட புலமைப் பரிசில் யாழ் பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் கடமையாற்றிய திருமதி பவானி தங்கத்துரைக்குக் கிடைத்துள்ளது. இவர் இவ் விசேட பயிற்சியைப் பெற நேபாளம் செல்வார்.

இவர் கரவெட்டி கிழக்கு செல்லத்தம்பி ஆசிரியரின் சிரேஷ்ட புதல்வியும். சரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவியுமாவார். (உ -118)


# புதிய உயர் கல்லூரி

90 ஆம் ஆண்டிற்கான G.A.Q, B.A, 1st in Com.

விரிவுரைகள் ஆரம்பம்: 03- 09- 88

இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும். விபரங்களை நேரிலும் / தபால் மூலமும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு

S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
கிளை
புதிய உயர் கல்லூரி,
மல்லாகம்.

(C-6423)


# குருநகரிலும் ஆதரவு

குருநகர், ஆக. 28

குடாநாட்டில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தாலுக்குக் குருநகர்ப் பகுதியிலும்ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

குருநகர் புதிய சந்தை வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருநகர் புதிய சந்தைக் கடைகள் மூடப்பட்டுக் கிடந்தன.

குருநகர் சந்தைப்பகுதி ஸ்தம்பித நிலை அடைந்ததன் காரணமாக சந்தைக்கு வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேர்ந்தது. [ஒ-51]

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் மேலும் 6 பேர் நியமனம்

பலாலி, ஆக. 28

யாழ்ப்பாண கல்வி மாவட்டத்திற்காக மேலும் ஆறு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் பெயர்கள் யாழ்-கல்வித் திணைக்களத்திற்கு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரங்கள் பின் வருமாறு:–

திரு. இ. இராசலிங்கம் (மந்துவில் கொடிகாமம்), செல்வி. இராஜினி செல்வத்துரை (சுன்னாகம்), செல்வி. ஏ. கௌரி (அல்லாரை தெற்கு, கொடிகாமம்), செல்வி [illegible] கமலா தேவி (களபூமி, காரைநகர்,) திரு. இ. துரைசிங்கம் (மாவிட்டபுரம், தெல்லிப்பழை), செல்வி.எஸ். சிவகாம்பிகா (கோப்பாய் வடக்கு). (ஐ–119)

## ஆங்கில ஆசிரியர் நியமனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் 36 ஆங்கில உதவி ஆசிரியர்கள் அண்மையில் நியமனம் பெற்றுள்ளனர்.

டெலிக் பயிற்சி நிலையத்தில் 6 மாத கால பயிற்சிபெற்றவர்களுக்கே மேற்படி நியமனம் வழங்கப்பட்டது. (உ–21)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சின்னத்துரை தங்கமுத்து

தோற்றம்: 1917 - 10 - 02
மறைவு: 1987 - 09 - 08

ஆண்டுத் திவஷம்: 1988. 08. 28.

எங்கள் கண்கண்ட தெய்வமே!
நீங்கள் மறைந்து இன்று ஓராண்டு என்ன, ஓர் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் எங்கள் மனதை விட்டகலாத உங்களை மிக்க வாஞ்சையுடன் நினைவு கூரும்.

அன்புக் கணவன், ஆசை மக்கள்,
அருமை மருமக்கள்,
ஆருயிர் பேரப்பிள்ளைகள்
தேவி, குஞ்சு, தேவன்; குடும்பத்தினர்,
பூட்டப்பிள்ளை பிரசாந்தி,
உற்றார், உறவினர், அயலவர்.
வேம்படி,
தங்கோடை, காரைநகர். (6022)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியா - புலிகள் இணக்கம் ஏற்படுவதை முறியடிப்பதற்கு சில சக்திகள் முயற்சிக்கின்றன

அண்மையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு பருத்தித்துறை புனர்நிர்மாணக் குழுவின் சார்பில் அதன் செயலாளர் திரு. ஆ. தேவராஜன் அனுப்பிய மகஜரின் சில முக்கியப் பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவுக்குமிடையில் ஒரு உடன்பாடு எட்டப்பட்டு விட்டது என்ற செய்தியும், அதற்குச் சார்பாக ஜூன் மாதத்தில் தமிழ் நாட்டில் நீங்கள் விடுத்த சில அறிவிப்புகளும் இலங்கைத் தமிழர்களையும் அமைதி விரும்பும் எல்லோரையும் மகிழ்ச்சி அடையச் செய்தது

ஆனால் கொழும்பில் உள்ள ஆங்கில சிங்கள தினசரிப் பத்திரிகைகளும், சில இலங்கை அமைச்சர்களும் இதனால் உளைச்சற்பட்டு வேதனையால் உழன்றுர்கள். புலிகளுடன் உடன்பாட்டுக்கு வர இந்தியாவுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று கேட்டு அவல் கக்கினுர்கள். அதை அயோக்கியச் செயல் என்று வர்ணித்தார்கள்.

சுருக்கமாகக் கூறின் இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது புலிகளை அழித்தொழிக்கும் சாதனம் என்பதும் இந்திய அமைதிப்படை அதற்காகவே இங்கு வந்துள்ளது என்பதும் அவர்கள் கருத்தாக இருந்தது. ஒப்பந்தத்துக்கு வெவ்வேறு வியாக்கியானம் கற்பித்தார்கள். இவற்றைத் துருவிப் படித்தவர்கள் இந்த முடிவுக்கே வந்திருக்க முடியும்.

பிணக்கு ஏற்பட்டு விட்டது என்ற செய்தி வந்ததும் அவர்களிடம் மலர்ச்சியும் களிப்பும் காணப்படுகிறது. கொழும்பில் ஏற்பட்ட இந்த நிலை உங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கும் என்று நம்புகிறோம்.

### உடன்பாட்டுக்கு நிகழ்ந்தது என்ன?

பத்திரிகைகள் வாயிலாக நாம் அறிந்தபடி ஒரு உடன்பாடு எட்டப்பட்டு அதன் இறுதி வடிவம் தங்களாலும் பிரபாகரனாலும் அங்கீகரிக்கப்பட மட்டுமே இருந்தது. அதாவது ஒரு உடன்பாடு ஏதோ ஒரு வடிவில் ஏற்கனவே இருந்திருக்கிறது.

இது குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.

சம்பந்தப்பட்டவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள் ஜனநாயக வழிகளை விடுதலைப் புலிகள் வேண்டுமென்றே முடக்குகிறார்கள். என்ற பொய்ப் பிரசாரத்தை இது பொய்ப்பித்துவிட்டது.

### பிணக்கும் மரபும்

உடன்பாட்டை நிறைவேற்றும் வழிவகைகளிலேதான் பிணக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஆக ஒரு ஐந்து நாள் போர்நிறுத்தத்தை அதுவும் தலைவரைச் சந்தித்து ஒப்பந்தத்தைப் பற்றிப்பேசவே — விடுதலைப் புலிகள் வேண்டினுர்கள், ஆயுதமுனைப் பிணக்குகள் ஏற்படும் போது, பேச்சுவார்த்தை நடத்தப்படும் போதே போர்நிறுத்தம் செய்வது சர்வதேச மரபாகும்.

இங்கே, எட்டப்பட்ட ஓர் உடன்பாட்டின் இறுதி வடிவத்தைப் பற்றிப் பேசவே இந்தப் போர் நிறுத்தத்தைக் கேட்கிறுர்கள். இது அர்த்தபுஷ்டியானது; இன்றியமையாதது, இதை வெற்றியளிக்கச் செய்வதற்கும், நிர்வாகத்தில் எந்த இடத்தையும் புலிகளுக்குக் கொடுப்பதற்கும் இலங்கை அரசு விரும்பவில்லையென்றே எண்ணத் தோன்றுகிறது,

கொழும்புப் பத்திரிகைகளும் அதே நிலைப்பாடுதான்.

இந்தியாவுக்கும் புலிகளுக்குமிடையில் ஒரு உடன்பாடு ஏற்படுவதை முறியடிக்க தன்னிச்சையான சில சக்திகள் நிச்சயமாக செயல்படுகின்றன.

### தமிழர் கஷ்டம்

அப்பாவித் தமிழர்கள் முன்னெப்பொழுதும்இல்லாதவாறு பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறுர்கள். மனிதாபிமான அடிப்படையிலாவது இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைப் போக்க இந்தியா விரும்பினுல் போர் நிறுத்தம் தவிர்க்க முடியாத தேவை. முன்னேற்பாட்டின் அடிப்படையில் இரு பக்கமும் சமகாலப் போர் நிறுத்தம் செய்து கொள்ளலாம். காலநிலைதான் முக்கியமானது. கொழும்பு சக்திகளுக்கு ஒன்றில் வடக்கு-கிழக்கில் உள்ள காலநிலை பற்றித் தெரியாது அல்லது அதைப்பற்றி அசட்டையாக இருந்து கொண்டு ஏதோ ஒரு கற்பனை உலகில் சஞ்சரிக்கிறுர்கள்,

### ஒப்பந்தங்கள் என்னவாகின?

உடன்பாடுகள், இணக்கங்கள், ஒப்பந்தங்கள் பற்றிய எங்கள் அறிவு ஆழமானது; குறிப்பிடத்தக்கது.

அந்த ஆவணங்கள் ஒவ்வொன்றும் காலம் தாழ்த்தவும் மேலும் மேலும் எமது உரிமைகளைப் பறிக்கவும்தான் பயன்படுத்தப்பட்டன. பின்பு அவை குப்பைக் கூடைக்குத்தான் போய்ச் சேர்ந்தன.

நாம் மேலும் மேலும் பங்கேற்பு ஜனநாயகத்தில் இருந்து பராதீனப் படுத்தப்பட்டு வந்து இறுதியாக இன்றைய அரசியல் யாப்பின் 6 ஆவது திருத்தத்தின் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அற்ற அடிமைகளாகி விட்டோம்.

ஒவ்வொரு நடவடிக்கையாலும் நேரடிப் பாதிப்புக்குள்ளான இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

### பாலஸ்தீனியர்கள் பற்றி கூறியது என்ன?

'அண்மையில் பாலஸ்தீனியர்களைப்பற்றி அம்மானில் குறிப்பிடுகையில் நீங்கள் (ராஜீவ் காந்தி)—

'வீர பாலஸ்தீனிய மக்களின் நியாயமான உரிமைகளுக்கான போராட்டம் இன்று ஒரு புதிய மோசமான நிலையை அடைந்துள்ளது... அவர்களின் தேங்கிய ஆத்திரத்தை இனியும் அடக்க முடியாது. இஸ்ரேவலின் மிருகத்தனமோ வன்செயலோ பாலஸ்தீன எழுச்சியை அழித்துவிட முடியாது' என்று சொன்னீர்கள்.

எங்கள் நிலையைப் பொறுத்தவரையிலும் இது உண்மை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

அண்மையில் எமது பிரச்சினை பற்றி நீங்கள் நடத்திய உயர்மட்டக் குழுக்கூட்டத்தின் பின் 'புலிகளை அழிப்பதால் யாருக்கும் எந்த இலாபமும் கிடையாது' என்று கூறிய கருத்து பாலஸ்தீனியர்களைப் பற்றிக் கூறப்பட்ட கருத்தின் அடிப்படையில் கூறப்பட்டதாக நினைக்கிறோம்.

### தமிழர்களின் கருத்து

தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் இலங்கை - இந்திய உடன்பாடு என்ன உத்தரவாதம் அளிக்கிறது என்ற விடயத்தில் கருத்து வேறுபாடுகள் இன்றைய பேச்சுவார்த்தையின்போது எழுவது — இலங்கை - இந்திய உடன்பாட்டில் தமிழ்க் குழுக்கள் எதுவும் கலக்காததினுலேயே.

தமிழர் அபிலாஷைகளைப் பொறுத்தவரை ஒப்பந்தம் தெளிவற்றது. அதை நிறைவேற்ற ஒத்துழைக்க முன் அதன் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கோருதல் முரண்டுபிடித்தலோ பிடிவாதமோ அல்ல.

விடுதலைப் புலிகளைத் தவிர, வேறு சில அமைப்புகளும், குறிப்பாகத் தமிழ்ப் பொது மக்களும் இதில் அக்கறையாக இருக்கிறுர்கள்.

எழுபது ஆண்டு அரசியல் மோசடியின் சுமைகளை அடுத்த சந்ததிக்குப் பாரப்படுத்தாமல் தவிர்க்க நாம் முயல வேண்டும். இதனுல் தான் பிரச்சினைக்குரிய விடயங்கள் தெளிவு படுத்தப்பட வேண்டும் என்ற புலிகளின் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவு நிறையக்கிடைக்கிறது. அதனுல் ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் போது தமிழ் மக்களின் ஐயங்களும் அச்சங்களும் நீக்கப்பட்டு சீர்செய்யப்படும் என்ற உத்தரவாதமளிப்பது இந்தியாவுக்குள்ள கடமையாகின்றது.

இத்தகைய கருத்துக்களை பொதுமக்கள், நிறுவனங்கள் தெரிவிக்கும் போது அவர்களைப் 'புலிகளின் வால்கள்' என்று வர்ணிப்பது பரிதாபத்துக்குரியதாகும். பொதுமக்களை மனங்கோணச் செய்து அந்நியப்படுத்துகிறோம் என்பதை அவர்கள் உணரவில்லை. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறுர்கள்.

(வளரும்)

ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாம்

# கல்வி வளர்ச்சி தடைப்படுவதற்கு பயிற்சியில்லாத ஆசிரியரே காரணம்

## கல்வி அதிகாரி உரை

இலங்கையில் கல்வி முறையின் வளர்ச்சி தடைப்படுவதற்குக்காரணம் போதிய பயிற்சி இல்லாத ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுவதேயாகும்.

கல்வி அமைச்சினுல் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் இது தெரிய வந்துள்ளது.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.எஸ். விஞயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 18 ஆம்திகதி வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் வி. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தன் பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

திரு. விஞயகமூர்த்தி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

ஆரம்பக் கல்வியை முறையாகப் பயிலாத மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வது கடினமாகும். ஆரம்ப ஆசிரியர்களின் முக்கிய பணி சமூகத்தைக் கட்டி எழுப்புவதாகும்.

கல்வி கற்க வரும் ஒவ்வொரு குழந்தையினதும் தனித்துவத்தை தனிச்சிறப்பை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்படி அறிந்து கொண்டால் தான் அவர்களுக்குக் கல்வி புகட்ட முடியும் — என்றுர்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது:-

நான்கு மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்க விரும்பும் ஒரு கலைஞன் அத்திவாரத்தை எவ்வளவு உறுதியானதாக அமைக்க வேண்டுமோ அந்தளவிற்கு ஆரம்பக் கல்வி உறுதியானதாக அமையவேண்டும்.

தொழிற்றுறையில் இரு சாரார் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றுர்கள். ஒரு சாரார் வைத்தியர்கள் மற்றவர்கள் ஆசிரியர்கள்.

ஆசிரியர்கள் வாழ்க்கை முழுவதும் மாணவர்களாக இருந்து கற்றுல் தான் தமது தொழிலில் பிரகாசிக்க முடியும் என்று கூறினுர்.

யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. வி. பாலசுந்தரம் தனது உரையில், இதுவரை இப்படியான பயிற்சி தென் பகுதியிலேயே நடைபெற்று வந்தது. இப்பொழுதுதான் முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இப்பயிற்சி நெறியை நடத்துவதற்கு ஒழுங்கு செய்த கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் பாராட்டப்பட வேண்டியவர் என்றுர்.

எஸ். சர்மா, எஸ். சிவானந்தன் மற்றும் ஆசிரிய மாணவ பிரதிநிதிகளில் இருவரும் உரை நிகழ்த்தினர். ஆசிரிய மாணவி ஒருவர் நன்றியுரை வழங்கினுர்.

(ஒ-5)

# சம்பள உயர்வு இவர்களுக்கு இல்லையா?

குருநகர், ஆக. 28

அரசாங்கத்தின் முடிவின்படி இவ்வருடம் ஜனவரிமாதம் தொடக்கம் கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டு வருகின்றதல்லவா?

இந்தச் சம்பள உயர்வை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஊழியர்களுக்கு வழங்குவதில் இழுபறி நிலை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வை வழங்குமாறு ஊழியர்கள் சமாசத்தை வற்புறுத்தி வருகின்ற போதிலும் சமாசம் மேற்படி விடயத்தில் பாராமுகமாக இருந்து வருவதாக ஊழியர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (உ- 51)

## விவசாய ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

மானிப்பாய் ஆக 28

விவசாய விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை இராமநாதன் கல்லூரியில் நடை பெற உள்ளது.

இக்கருத்தரங்கில், பயிர்க்காப்புறுதி விவசாய ஓய்வூதியத் திட்டம், கமநல சேவைகள் திணைக்கள கடமைகள் ஆகியவைபற்றி கமநலசேவை மாவட்டப் பணிப்பாளர் திரு. சு. சிவகுரு உரையாற்றுவார்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. நித்தியரட்ணம் தனஞ்செயன், விவசாயத்தில் ஓமோன்களைப் பயன் படுத்தல் பற்றி கருத்துரை வழங்குவார்.

விவசாய விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர்களான திரு. க. செல்வக்குமாரன், திருமதி. எஸ். துரைராசா ஆகியோர் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (உ-90)

## வாசகர் திருமுகம்

### எது நியாயம்?

பாடசாலை அதிபர்கள் தெரிவுக்கான பரீட்சை நடக்கப் போவதாக, பத்திரிகை, வர்த்தமானி மூலம் அறிவித்தல் வெளியாகியிருக்கிறது.

1973 அளவில் ஒரு போட்டிப் பரீட்சை, 1982 அளவில் ஒரு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. இவைகளின் பெறுபேறுகள் இன்று வரை தனிப்பட்ட முறையிலோ, பத்திரிகைகள் மூலமோ வெளியாகவில்லை.

30-4-80ல் அதிபர்கள் நியமனம் நடைபெற்றது. இதில் சேவை மூப்பு, தராதரம் ஒன்றும் பார்க்கப்படவில்லை. தராதரமற்ற பதில் கடமை புரிந்தோரும் நிரந்தர அதிபர்களாயினர். இதிலிருந்து தவறி இன்றுவரை சம்பளமின்றி அதிபர் கடமைபுரியும் ஆசிரியர்கள் 55 வயதிலும், சேவை நீடிப்பிலும் இருந்து வருகிறுர்கள்.

இப்பரீட்சைக்குத் தேவையான சேவையனுபவம் 5 வருடத்திலிருந்து 12 வருடங்களாகும். இவ்வயதுப் புதியவர்களுடன், முன்கூறிய வயதினர் போட்டியிட்டுப் பரீட்சை எழுத முடியுமா? சிறந்த பதிலதிபர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்கள் நாளதுவரை தாம்பெற்ற செயல்முறை, நடைமுறை அனுபவத்தினுல், பாடசாலைகளை வளர்த்து சிறந்த அதிபர்களாகக் கடமையாற்றுகின்றனர். அண்மையில் பயிற்சி பெற்ற, பட்டம் பெற்றவர்களுடன், வயதில் கூடிய பதிலதிபர்கள் போட்டிப் பரீட்சை எழுதும் சக்தி, ஆற்றல், வேகம், உடையவர்களாக இருப்பர் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

தவணை விடுமுறை, சிவில் நிர்வாசம் ஸ்தம்பித நிலை, கச்சேரிகளில் காசுகட்ட முடியாத, அதிபர்கள் மேலதிகாரிகளைக் காணும் சூழ்நிலையற்ற நிலையில் எப்படி உரிய காலத்தில் விண்ணப்பிக்க முடியும்?

இந்நிலைகளை உற்று நோக்கிப் பதிலதிபர்களின் சேவை தராதரம், அனுபவங்களைத் திரட்டி, நேர்முகப் பரீட்சை மூலம், தகுதிக்கேற்ப நியமனங்களைக் கொடுத்து, மீதியாகும் வெற்றிடங்கட்குப் போதிய கால அவகாசத்துடன் போட்டிப் பரீட்சை நடத்துவதே நியாயமாகும். போட்டிப் பரீட்சையில் முதிர்ந்த சேவை மூப்புள்ள ஒரு பதிலதிபர் தவறிச் சாதாரண ஆசிரியராகிவிடின கல்விச் சமூகத்தில் அவர் நிலை எப்படியாக இருக்கும்? உரியவர்கள் இதனை உற்று நோக்கி, ஆவன புரியுமாறு தயவாகக் கேட்கிறேன்.

சிவ. நடராசா
பதிலதிபர்

பளை.

### போரூட் உதவி

காரைநகர் பாலாவோடையில் அமைந்துள்ள மோகனதாஸ் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைப்பதற்கு போரூட் நிறுவனம் ரூபா 31 ஆயிரம் வழங்கியுள்ளது. (உ73)

### இளைஞர் கைது!

அண்மையில் காரைநகர்ப் பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்றை தொடர்ந்து காரைநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறுர். (உ-73)

### நீலங்காட்டில் புதிய வீடுகள்!

காரைநகர் நீலங்காட்டு மக்களுக்கு வழங்குவதற்கு போரூட் நிறுவனம் தலா ஏழாயிரத்து ஐந்நூறு ரூபா பெறுமதியுள்ள சுமார் ஐம்பத்து மூன்று வீடுகளைக் கட்டிவருகிறது.

நீலங்காட்டு மக்களின் வீடுகள் கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் அழிக்கப்பட்டது தெரிந்ததே. (உ- 73)

### மாணவர்களுக்கு தடுப்பு மருந்து

மானிப்பாய், ஆக. 28

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை மாணவர்களுக்கு என்னசொறி, சிரங்கு நோய்களுக்கான தடுப்பு மருந்து வகைகளை போரூட், றெட்பானு, சர்வோதயம் அகியவற்றுடன் குழந்தைகள் பாதுகாப்பு நிதியமும் சேர்ந்து வழங்கியுள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் தெரிவிக்கின்றுர். (உ- 90)

### திலீபனின் நினைவு தினம்

யாழ்ப்பாணம் ஆக 28

விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் அமரர் திலீபனின் முதலாவது ஆண்டு நினைவு தினம் ஊரெழுவில் அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை ஊரெழுபிரஜைகள் குழு மேற்கொண்டுள்ளது.

மேலும் ஊரெழுவில் திலீபனின் இல்லத்திற்குச் செல்லும் வீதியில் நடப்பட்டிருந்த திலீபன் வீதி என்ற பெயர் பலகையை மீண்டும் நடுவதென்றும் பிரஜைகள் குழு தீர்மானித்திருக்கிறது.

(உ-9)


உ

## திருமண அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் விபவ வருடம் ஆவணித் திங்கள் 13 ஆம் நாள் (29-08-1988) திங்கட்கிழமை பகல் 1.38க்கும் 3.34க்கும் இடையே வரும் சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **சந்திரவதனன்(மோகன்)** அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **விஜயகுமாரி (விஜயா)** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் உற்றுர், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


தங்கள் நல்வரவை நாடும்,

| | |
|---|---|
| திரு. T. K. அருணுசலம் உரிமையாளர்: வேல் ஸ்டோர்ஸ், கல்முனை. | திரு. கோ. சுப்பையா பிரதம லிகிதர் தொழிற் திணைக்களம், கிளிநொச்சி. |
| திருமதி தங்கம்மா அருணுசலம் நாவலடி. புலோலி மேற்கு, பருத்தித்துறை. | திருமதி குழந்தைநாயகி சுப்பையா வத்தனை, புலோலி மேற்கு, பருத்தித்துறை. |

(6021)



புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்® நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை ரூபா 68/55 125 கிறும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

5 மாவட்டங்களின்

# ஆரம்பக் கல்வி ஆசிரியர் பயிற்சி யாழ். மாவட்டத்தில்

பலாலி ஆக 28

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா கல்வி மாவட்டங்களுக்கு ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும், யாழ் கல்வி மாவட்டத்திற்கு இனிமேல் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கும் யாழ்ப்பாணத்திலேயே சேவை முன்பயிற்சி வழங்கப்படும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சிகள் முடிவுற்றவுடன் புதிய தொகுதியினருக்கு பயிற்சிகள் ஆரம்பமாகும்.

யாழ் கல்வித் திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

வவுனியாக் கல்வி மாவட்டத்திற்கு 14 ஆசிரியர்களும், கிளிநொச்சிக் கல்வி மாவட்டத்திற்கு 3 ஆசிரியர்களும் மன்னார் மாவட்டத்திற்கு 24 ஆசிரியர்களும், முல்லைத்தீவுக் கல்வி மாவட்டத்திற்கு 4 ஆசிரியர்களுமாக மொத்தம் 51 ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ - 119)

## சமயாசமய ஊழியர் நிரந்தரமாவர்

கொழும்பு. ஆக. 28

அரச திணைக்களங்களில் பணியாற்றி வரும் சமயாசமய ஊழியர்கள் விரைவில் நிரந்தர நியமனம் பெறுவார்கள்.

இதற்காக அரசு விசேட திட்டம் ஒன்றைத் தயாரித்து வருவதாகப் பிரதமர் பிரேமதாஸ செவ்வாயன்று கொழும்பில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்தார். (ஒ-எ)

பரீட்சை மேற்பார்வையாளர் நியமனம்:

## யாழ் கல்வித் திணைக்கள நடவடிக்கைக்கு பாராட்டு

சுன்னாகம், ஆக. 28

பரீட்சை மேற்பார்வையாளர்கள் நிரந்தர நோக்குனர்கள் நியமனங்கள் சம்பந்தமாக யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கைகள் அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

இது காலவரை ஒரு சிலரே மேற்படி பதவிகளுக்கு மாறி மாறி நியமிக்கப்பட்டு வந்தனர். திரு. வெற்றிவேலு சபாநாயகம் கல்விப் பணிப்பாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின் இப்பதவிகளுக்கு நியமனம் செய்வது பரவலாக்கப்பட்டுள்ளது.

பல புதியவர்கள் இப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டதால் சகலருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதாகக் கூறிக் கொள்ளப்படுகிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் ஆசிரியர்கள், அதிபர்கள் மத்தியில் இதுகாலவரை இருந்து வந்த விரக்திநிலை நீக்கி வைக்கப்பட்டதுடன் பலரினதும் வரவேற்பையும் பெற்றுள்ளது. (ஒ - 27)

## அரசு அதிகாரிகள் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடலாம்

கொழும்பு, ஆக.28

அரசியல் உரிமைக்குத் தகுதி பெற்ற அரச அதிகாரிகள் மாகாணசபைத் தேர்தல்களிலும் போட்டியிட அனுமதிப்பது என்று அமைச்சரவை தீர்மானித்தது.

ஜனாதிபதி இது சம்பந்தமாகச் சமர்ப்பித்த சிபார்சை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுபவர்கள், உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் போல் பணிபுரியலாம் என்றும் —

ஆனால் அவர்கள் முதலமைச்சர், அமைச்சர்கள், சபை முதல்வர்கள், சபைத் தலைவர், உபதலைவர்கள்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டால், அவர்கள் அரச ஊழியர் வேலையை ராஜினாமாச் செய்து விடவேண்டும் என்றும் அமைச்சரவை தீர்மானித்தது.

இதற்காகப் பொதுநிர்வாகத் திணைக்களத்தில் நிறுவனக் கோவையைத் திருத்துவது என்றும் அமைச்சரவை தீர்மானித்தது. (ஒ-எ)

# பூஸா கைதிகளை உடன் விடுதலை செய்க!

ஜனாதிபதிக்கும், தூதுவருக்கும் கடிதம்

மட்டக்களப்பு, ஆக 28

பூஸா முகாம் உண்ணாவிரத கைதிகளின் கோரிக்கைகளைபரிசிலனை செய்து உடனடியாக அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள்.

இக்கோரிக்கை அடங்கிய அவசர கடிதமொன்று மட்டக்களப்பு காந்தி சேவா சங்கம் ஜனாதிபதி, இந்திய தூதுவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் சங்கச் செயலாளர் திரு. கதிர் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளதாவது:-

பூஸா இராணுவ தடுப்பு முகாம் கைதிகளை இலங்கை-இந்திய உடன்படிக்கையின் கீழ் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி கைதிகளில் மூவர் சாகும் வரையிலான உண்ணாவிரத போரில்குதித்துள்ளனர்.

தமது போராட்டம் குறித்து ஸ்ரீலங்கா அரசிற்கு அறிவித்தும், எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில் அவர்கள் இப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உடல் நிலை, மன நிலை, ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கிறது. இந் நிலையில் இவர்கள் உண்ணாவிரதப்போராட்டத்தில் குதித்திருப்பது நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும்.எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. [உ-21]

## யாழ் — மண்டைதீவு பஸ் சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம் ஆக.28

யாழ்ப்பாணத்திலிருந்து மண்டைதீவு பிள்ளையார் கோவில் வரை மட்டும் இதுவரை நடைபெற்றுவந்த யாழ்-மண்டைதீவு பாதை மினிபஸ் சேவை மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவு பஞ்சாயத்துச் சபை பொதுக்கூட்டம் வடபிராந்திய மினிபஸ் சேவை சங்கங்களின் சமாஜத்தலைவர் திரு. பொன். மதிமுகராசா தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் இந்த பஸ்சேவையை மண்டைதீவு தெற்கு மதி ஒளி சனசமூகநிலையம் வரை நீடிக்கவேண்டும் என மண்டைதீவு தெற்கைச் சேர்ந்த 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வட்டார மக்களின் சார்பில் கோரிக்கை விடப்பட்டது.

இந்த வேண்டுகோளுக்கிணங்க இச்சேவை விஸ்தரிக்கப் பட்டது.

இது வரை காலமும் சுமார் ஒருமைல் தூரம் வரை நடந்து வந்து பஸ் ஏறிய மேற்படி வட்டார மக்கள் இதனால் பயன் அடைவார்கள்.

இதேசமயம் யாழ் - மண்டைதீவு சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை பதினைந்தாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ)

## அச்செழுவில் உணவு முத்திரை விநியோகம்

அச்செழு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 2ஆயிரம் உணவு முத்திரைகள் ஏற்கனவே வி நியோகிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 300 முத்திரைகள் வழங்கப்பட இருப்பதாக கிராம சேவையாளர் திரு. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். (உ-72)

## பாடசாலை இயங்கவில்லை

காரைநகர், ஆக.28

கடந்த வியாழக்கிழமை வலந்தலையில் நடந்த கிரனேட் தாக்குதலை அடுத்து காரைநகர் வலந்தலை தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் 29ஆம் திகதி வரை மூடப்பட்டுள்ளது.

22ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை திறக்கப்பட இருந்தது.

அச்சம் காரணமாக மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்லாததாலேயே அது மூடப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. (73)

## 3 ஆயிரம் நாய்களுக்கு விசர்நாய்த் தடுப்பூசி!

கோப்பாய்ப்பகுதியில் போடப்பட்டது

கோப்பாய். ஆக 28

கோப்பாய் சுகாதார அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அண்மையில் 3,000 வளர்ப்பு நாய்களுக்கு விசர்நாய் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

அண்மைக்கால அசம்பாவிதங்களின் போது இப் பகுதிகளில் வசித்த பல பொது மக்கள் தமது வீடுகளை விட்டு அவசர அவசரமாக வெளியேறிய போது தமது வளர்ப்பு நாய்களை அப்படியே விட்டு விட்டுச் சென்றனர்.

அவற்றில் பல தற்போது தெருநாய்களாகத் திரிகின்றன. மக்கள் இந் நாய்கள் குறித்து அவதானமாக இருக்கவேண்டுமென கோப்பாய் சுகாதார அத்தியட்சகர் கோரியுள்ளார். (உ - 72)

THE JAFFNA ACADEMY
G. C. E A L Aug 1989 Revision Classes
Physical & Bio Science
க. பொ. த உயர்தர பரீட்சைக்கு ஒரு முறையாவது தோற்றிய எவரும் இந்த வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றுக மீட்டல் செய்யப்படும்.
சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும். வகுப்புகள் 05 - 09 88 இல் ஆரம்பமாகின்றன.
DIRECTOR,
Jaffna Academy,
376, Main Street,
Chundikuli.
(5979)

ROCK ENGINEERS CONTRACTORS
குழாய்க் கிணறுகள்
ரூபா. 6500/- மட்டுமே
"S"லோன் பைப் உட்பட
மக்களின் நன்மை கருதி குறைந்த செலவில்கூட ஒரு மொடேர்ண் முறையில் உத்தரவாதத்துடன் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுப்பதற்கு பலவருட அனுபவமுள்ள எமது நிறுவனம் முன்வந்துள்ளது.
மனிதனின் சக்தியையும், மெஷினின் (இயந்திரம்) சக்தியையும் பாவித்து செய்யும் ஓர் கூட்டுமுறை (Combine Method) நீங்கள் உங்கள் மோட்டரோ, வோட்டர் பம் மூலமோ தொடர்ச்சியாக 24 மணித்தியாலமும் இறைத்துப் பார்க்கலாம். மின்சாரமோ, வோட்டர் பம்மோ இல்லாதவர்களுக்கு கைப்பம்பு (Hand Pnmp) பூட்டிக் கொடுக்கப்படும்.
குறிப்பு:- தனியே மெஷின் மூலம் அடிப்பதற்கு முன்னர் தொடர்பு கொண்டவர்களுக்கு, வேலை தொடங்கும் திகதிகள் கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
தயவுசெய்து கந்தோர் நேரங்களில் மட்டும் சந்திக்கவும்.
உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
றெக் என்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி,
(5897) கோப்பாய்.

## சிதைவடையும் தும்பு ஆலை

குருநகர் ஆக28

தும்புத்தொழிற்சாலை ஒன்று துரும்பாகிக்கொண்டிருக்கிறது.

யாழ். சப்பல் வீதியில் முதலாம் குறுக்குவீதிக்கு அருகாமையில் உள்ள தேசிய தும்புத்தொழிற்சாலையே மேற்படி நிலைமைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

கடந்தகால அசாம்பாவிதங்களின் போதுஷெல் தாக்குதலுக்குஇலக்கான இதன் கட்டடம் பெரும் அழிவு நிலையில் காட்சி தருகிறது.

கூரை ஓடுகள் இல்லாமல் கட்டடம் மேலும் சிதைவடைந்துகொண்டிருக்கிறது. (உ- 51)

## கைக்கடிகாரம் யாருடையது?

யாழ்ப்பாணம் ஆக 28

கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று, உதயன் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

கைக்கடிகாரத்தை கண்டெடுத்துஒப்படைத்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி ஏ. குமாரசாமி ஆவார்.

கைக்கடிகாரத்தின் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி, மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள, உதயன் விளம்பரப் பணிமனையில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்: (அ)

# புறமுதுகு காட்டாது புனித மரியன்னை போன்று சவால்களைச் சந்திப்போம்

தியான உரையில் அருட்தந்தை

பருத்தித்துறை, ஆக 28

கல்வாரியில்- கிறிஸ்துவால் புனித மரியன்னை மனுக்குலத்தின் தாயாக நியமிக்கப்பட்டார். அவ்வேளை மரியாள் கொலைகாரர்களுக்குப் பயந்து ஓடியிருந்தால் இந்தப் பேறு கிடைத்திருக்காது.

புனித மரியாளைப் போல நாமும்பிரச்சினைகட்குப் புறமுதுகு காட்டாது சவால்களை ஏற்று வாழ வேண்டும் இக்கால வாழ்க்கைக்கு புனித மரியாள் காட்டிய முன் மாதிரி மிகப் பொருத்தமானதாகும். இப்படிப் புனித மரியாளின ஆண்டினை ஒட்டிப் பருத்தித்துறைப் பங்கில் தும்பளை புனித லூர்து பதியில் ''மரியன்னையுடன் ஒரு மணி'' என்னும் தியான உரை வழிபாட்டில் அருள்தந்தை ஆபரணம் சிங்கராயர் குறிப்பிட்டார். புனித மரியாளின் ஆண்டினை ஒட்டிப் பருத்தித்துறைப் பங்கில் பல பக்தி முயற்சிகளை பங்குத் தந்தை அருட்திரு கிருபாகரன் அடிகளார் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. வீடுகள் தோறும் செபமாலை வழிபாடு நடைபெற்றது. (உ-118)

பகிரங்க அறிவித்தல்
யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற் பற்று, வண்ணார்பண்ணை கிழக்கு இறை "பகுறபன் காடு'' நில. பர. குளி 15.05 சிறும்பியடி ஒழுங்கை, யாழ். மாநகர சபை எரி மதிப்பிலக்கம் 15/5 கொண்ட ஆதனம் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கு காணி / 2619-ல் அம்பலவி சின்னத்தம்பி தவராஜாவும் பெண் இராசம்மாவும் வழக்காளிகளாக எனக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு மன்றினால் இன்னமும் விசாரித்து தீர்ப்பளிக்கப்படவில்லை. தீர்ப்பளிக்கப்பட்டதாக பொய்யான தகவலை இவர்கள் கொடுத்து எனக்குச் சொந்தமான இந்த ஆதனத்தை தங்கள் ஆதனத்துடன் அறுதி விற்க முயற்சி செய்வதாக அறிகின்றேன். இவ்வாதனத்தை அறுதி விற்பதற்கு வழக்காளிகளுக்கு எவ்வித உரித்தும் இல்லை என்பதை பகிரங்கப்படுத்துகின்றேன்.
நாகமுத்து பத்மநாதன்
(காணிச் சொந்தக்காரர்)
13/1, புனித சந்தனமாதா ஒழுங்கை,
சுண்டுக்குளி.
மேற்கூறிய விபரம் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.
து. சோமசுந்தரம்
[6018] எதிராளியின் சட்டத்தரணி.

# கருணாநிதி லஞ்சம் வாங்கினர்; எஸ். எஸ். ஆர் குற்றச்சாட்டு!

புதுக்கோட்டை, ஆக.27

தி. மு. க. ஆட்சியில் இருந்த போது முதல்வராக இருந்த கருணாநிதி தன்னிடம் ரூ 25 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக எஸ். எஸ். ராஜேந்திரன் கூறினர்.

புதுக் கோட்டையில் அ.தி.மு.க. (ஜெ) அணியின் ஜெயலலிதா ஆதரவாளர் கூட்டம் நடந்தது.

சின்னப்பா திடலில் நடந்த இந்த கூட்டத்துக்கு மாவட்ட செயலாளர் ரகுபதி தலைமை வகித்தார்.

அப்போது அவர் பேசியதாவது:-

நெடுஞ்செழியன் கட்சியை வளர்க்க முடியாதவர் பாதுகாக்கமுடியாதவர். எம். ஜி. ஆர். இறந்த போது அவர் இரண்டாவது இடத்தில் இருந்தவர் என்பதால் அவரை தற்காலிக முதல்வராக ஏற்றுக் கொண்டோமே தவிர அ.தி.மு.க.வின் தலைமையை ஏற்க அவரை விட்டால் வேறு ஆள் இல்லை என்பதற்காக அல்ல. ஜெயலலிதாவுக்குத்தான் மக்களின் ஆதரவு இருக்கிறது. எனவே அவர்தான் கட்சியின் தலைவராக இருக்க தகுதி உள்ளவர்.

தி.மு.க. வுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை. அன்று முதல்வராக இருந்த கருணாநிதி எம் எல்.ஏ வாக இருந்த என்னிடமே லஞ்சம் வாங்கினர். எனக்கு வேண்டிய ஒருவரது மகனை மருத்துவக் கல்லூரியில் சேர்க்க கருணாநிதியின் சிபார்சை பெறச் சென்றபோது ரூ 25ஆயிரம் லஞ்சமாகக் கேட்டு வாங்கினர். அப்படிப் பட்டவர் மறுபடியும் முதல்வராக வந்தால் என்ன ஆகும்? ஊழலா ஒழியும். ஆர்.எம்.வீ ஒரு அரசியல்வாதியே அல்ல: என்னிடம் ரூ 250க்கு கணக்குப் பிள்ளையாக இருந்தவர் நான்தான் எம்.ஜி. ஆரிடம் கணக்குப் பிள்ளையாக சேர்த்து விட்டேன்.

இவ்வாறு எஸ். எஸ். ஆர். பேசினர்.

ஜெயலலிதாவின் ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்த இந்தக் கூட்டத்தை நடக்க விடாமல் தடுக்கும் முயற்சியில் எதிர் அணியினர் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து கூட்டத்துக்கு பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இருந்தும் திருநாவுக்கரசின் ஆதரவாளர்கள் பொதுக் கூட்டம் நடந்த இடத்துக்கு சுமார் 50 பேர் ஊர்வலமாக வந்தனர். அவர்களை பொலீஸார் அப்புறப்படுத்தினர். (எ)

இலங்கை அதிபர்கள் சேவையின் I-ஆம் II ஆம் III ஆம் தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான
போட்டிப் பரீட்சை
1988 ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான
1½ மாத துரித பயிற்சி வகுப்புகள்
பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை
ஆரம்பம்: 3 - 9 - 88
பாடநெறி:- (I) கிரகித்தல், (II) பொது அறிவு
(III) கல்விக் கொள்கையும் நிர்வாகமும்.
★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.
(பி. ப. 1-4 மணிவரை)
★ கட்டணம் ரூபா 250.00 - (முழுப்பயிற்சிக்கும் தரம் I, II)
★ கட்டணம் ரூபா 200.00 - (தரம் III)
விபரங்களுக்கு: நேரில்/தபாலில்.
ASTAN INSTITUTE
166/1 HOSPITAL ROAD - JAFFNA.
A S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)
(C/6265)

45ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி



செல்வி பொன்னுச்சாமி சுசீலாதேவி

மலர்வு: 07 - 04 - 1970 உதிர்வு: 15 - 07 - 1988

விதியின் கரங்களில் சிக்கி விண்ணுலகடைந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கிறோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தந்தை, தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
விஸ்வமடு. ஆசிரியர்கள், மாணவ சகோதரர்கள்.

[5951]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

உயர்வகலம் திண்மை அருமை இந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்.

**பொருள்:**

உயரம், அகலம், உறுதி, பகைவரால் அழிக்கமுடியாத அருமை ஆகிய இந்த நான்கும் அமைந்திருப்பதே அரண் என்று நூலோர் கூறுவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22073
28-08-1988 த. பெ ஓல. 23


## மக்கள் விருப்பம்

கடந்த வியாழக்கிழமை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் பெருமளவில் வெற்றியளித்தது.

இது மக்களின் மனப்போக்கைப் பிரதிபலித்த ஓர் அளவுகோலாகக் கொள்ளப்பட வேண்டும்.

சமீப காலமாக தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்படும் தேடுதல், கைது, துன்புறுத்தல் ஆகியவற்றால் மக்கள் மனம் நொந்து போயிருக்கிறார்கள். அவ்வாறான நடவடிக்கைகளுக்கு சாத்வீக வழியில் தமது எதிர்ப்பைக் காட்டத் தயங்கப் போவதில்லை என்ற துணிச்சலையும் வியாழக்கிழமை நடந்த ஹர்த்தால் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

★ தமிழ் மக்கள் கைது செய்யப்படுதல், தாக்கப்படுதல், தடுத்து வைக்கப்படுதலைக் கண்டித்தும்—

★ தமிழ்ப் பிரதேசங்களில் நடக்கும் (அரசாங்க ஆதரவுடனான) சிங்களக் குடிகுடியேற்றங்களை இந்திய அரசு தடுக்கத் தவறியதைக் கண்டித்தும்—

★ தமிழ் அரசியல் கைதிகள் — தடுப்புக் காவல் கைதிகள் இதுவரை விடுவிக்கப்படாததைக் கண்டித்தும்—

★ வன்னிப் பகுதியில் நடத்தப்படும் தேடுதலினால் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டித்தும் —

★ இந்திய அரசு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கோரியுமே — வியாழக்கிழமையன்று பரந்த அளவில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைசிக் கோரிக்கையான — யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து — இதற்கு முன்னர் — சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னர் — தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்பட்ட சாத்வீகப் போராட்டங்களுக்கு இந்தியா சிறிதேனும் மதிப்பளிக்கவில்லை. ஈழத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறிவரும்போதிலும், அதே மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கவோ அதனைக் கவனத்தில் எடுக்கவோ தவறிவிட்டது.

சாத்வீகப் போராட்டங்கள் தவிர, ஆயிரக்கணக்கில் ஈழத்தமிழ் மக்களின் பொது நல ஸ்தாபனங்கள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜர்களை அவர் புரட்டித் தானும் பார்த்ததாக இல்லை.

தம்மிடம் அளவுக்கு அதிகமான இராணுவ பலம் உண்டு என்ற எண்ணத்தினாலோ என்னவோ, கௌரவப் பிரச்சினை கருதியோ என்னவோ, ஈழத் தமிழ் மக்களின் கருத்துக்கு, வேண்டுதலுக்கு, கோரிக்கைகளுக்கு சிறிதளவேனும் மதிப்பளிக்கவில்லை.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற கோரிக்கைகள் குறித்து தனது ஆரம்ப நிலைப்பாட்டில் இருந்து சிறிதும் மாற்றமில்லாத, விடாப்பிடிப் போக்கையே தொடர்ந்து இந்தியா கடைப்பிடித்து வருகிறது.

ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே அன்றி இராணுவத் தீர்வு ஒத்து வராது என்று இலங்கை அரசுக்குப் புத்தி புகட்டிய இந்தியாவும் அதன் பிரதமரும்—

இப்போது—

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தான் நல்லவழி என்று நினைத்து விட்டனரோ...?

இல்லையெனில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திப் பேச்சுவார்த்தை மூலம் பிணக்கைத் தீர்க்க முயற்சிக்காமல், தமிழ் மக்களின் கருத்தைப் புரிந்து கொள்ளாமல், அதனைச் செவிமடுக்க வேண்டுமென்பதையே மறந்து, தாம் நினைத்ததைச் செயற்படுத்த முயற்சிப்பது ஏன்......?

காந்தி பிறந்த தேசத்தவர்கள் அமைதிப் படையாக வந்து சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைகளில் இருந்து காப்பாற்றப் போகிறார்கள் என்று ஒரு வருடத்துக்கு முன்னர் பூரித்து ஆர்ப்பரித்த அதே ஈழத் தமிழ் மக்கள்—

சிங்கள இராணுவத்திடம் இருந்து அனுபவித்த அதே அவலங்களையும், கஷ்டங்களையும் அனுபவிக்கும் நிலை—

ஜே. ஆரும், ராஜீவும் ஒரே கப்பலைச் செலுத்தும் இரட்டை மாலுமிகள் என்று நினைக்கும் நிலை— உருவாகி வருகிறது.

நாற்பது வருடமாக ஏமாற்றப்பட்டவர்கள், தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதாக உணர்கிறார்கள்.

இந்த நிலையை மாற்ற இனியாவது இந்தியா முன்வந்து, தமிழ் மக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கும் என நம்புகிறோம். அதுவே மக்களது விருப்பமும் ஆகும்.

ஏழு எதிர்க்கட்சிகள் அமைத்த

# இந்திய தேசிய மக்கள் முன்னணியின் தொடக்க விழா சென்னையில் செப். 17இல்

சென்னை, ஆக 27

இந்தியாவில் ஏழு எதிர்கட்சிகள் சேர்ந்து அமைத்து உள்ள தேசிய மக்கள் முன்னணியின் தொடக்க விழா சென்னையில் அடுத்த மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அன்று பிற்பகல் 3 மணிக்கு சென்னையில் பிரமாண்டமான ஊர்வலம் நடைபெறும்.

அண்ணா அறிவாலயத்தில் இருந்து ஊர்வலம் புறப்பட்டு கடற்கரை சீரணி அரங்கை அடையும்.

ஊர்வலம் செல்லும் பாதையில் ஒரு இடத்தில் இருந்து திரு வி. பி. சிங், என் டி. ராமராவ், தேவிலால் உட்பட தேசிய மக்கள் முன்னணித் தலைவர்கள் பார்வையிடுவர்.

செப்டம்பர் 15 ஆம் திகதி அண்ணா பிறந்த நாள்.

தேசிய மக்கள் முன்னணியின் தொடக்க

## அண்ணா பிறந்தநாள் விழாவில் வி. பி. சிங், தேவிலால்

விழாவை ஒட்டி சென்னை நகரில் அண்ணா பிறந்த நாள் விழா செப்டம்பர் 16 ஆம் திகதி கொண்டாடப்படும்.

தமிழ்நாட்டில் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை அண்ணா பிறந்த நாள் கொண்டாடப்படும்.

இத்தகவலை தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி வெளியிட்டார். (எ)

## பூமியதிர்ச்சியில் நேபாளத்தில் மட்டும் 550 பேர் பலி!

காத்மண்டு, ஆக. 27

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பூகம்பத்தில் நேபாளத்தில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 550 என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. (எ)

ஈரான்-ஈராக் நேரடிப்பேச்சு

## ஊக்கமளிப்பதாக இல்லை; ஐ.நா பொதுச் செயலாளர் தகவல்

ஜெனிவா, ஆக 27

ஈராக்குடன் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட்டு வரும் ஈரான் தொடர்ந்து பேச்சுக்களை நடத்துவதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்திருக்கிறது.

ஐ. நா. தீர்மானம் இல: 598, ஐ நா பொதுச்செயலாளரின் திட்டம், 1975 இல் வகுக்கப்பட்ட சர்வதேச எல்லை ஆகிய மூன்று அம்சங்களின் அடிப்படையில் தான் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்று ஈரான் வலியுறுத்துகின்றது.

இது வரை நடைபெற்ற பேச்சுக்கள்பற்றி ஐ. நா செயலாளர் நாயகம் பெரெஸ் டி குயிலர் கருத்து வெளியிட்டார்.

''நல்லபடியாக உள்ளது ஆனால் ஊக்கமளிப்பதாக இல்லை''—என்று பொதுச் செயலாளர் குயிலர் தெரிவித்தார். (எ)

வளைகுடா:

## யுத்த நிறுத்த மீறல்கள்; பரஸ்பரம் குற்றச்சாட்டு

தெஹ்ரான், ஆக. 27

யுத்தநிறுத்த மீறல்கள் இடம் பெறுவதாக ஈரானும், ஈராக்கும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வருகின்றன. இரண்டு நாடுகளும் தங்கள் துருப்புக்களை மீண்டும் யுத்த முனைக்கு அனுப்பி வருவதாக வளைகுடாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐந்து படைப் பிரிவுகளை ஈரான் புதிதாக யுத்தமுனைக்கு அனுப்பி வைத்திருப்பதாக ஈராக் குற்றஞ்சாட்டி உள்ளது.

இம் முறைப்பாடுகள் குறித்து வளைகுடாவில் உள்ள ஐ. நா. அமைதிப் படையினர் கருத்து எதையும் வெளியிடவில்லை. (எ)

## முதலமைச்சர் முகத்தில் கரி பூசிய இளைஞர்!

பாட்னா, ஆக. 27

முதலமைச்சர் முகத்தில் கரிபூசிய சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றிருக்கிறது.

பீஹார் மாநிலத்தில் கடந்த 11ஆம் திகதி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 11 பேர் கொலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தை நேரில் விசாரிக்க பீஹார் முதலமைச்சர் பகவத்ஜா ஆஷாத் அக்கிராமத்துக்குச் சென்றிருந்தார்.

அப்போது ஒரு இளைஞன் திடீரென்று தன் கையில் வைத்து இருந்த கரித்தூளை முதலமைச்சர் முகத்தில் பூசிவிட்டான். (எ)

## கொரிய இணைப்பு: பேச்சில் முட்டுக்கட்டை

வடகொரிய, தென்கொரிய இணைப்புப் பற்றிய பேச்சுக்களில் முட்டுக்கட்டைஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைப்புறக் கிராமம் ஒன்றில் இரண்டு நாடுகளின் நாடாளுமன்றத் தூதுக்குழுக்களும் இப்பேச்சுக்களை நடத்தி வந்தன.

இணைப்புப் பற்றிய பேச்சுக்களில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படவில்லை என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் சோல் ஒலிம்பிக் போட்டிகளை வடகொரியா பகிஷ்கரிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

## பர்மாசிறையில் கலவரம்

பர்மாவில் சிறை ஒன்றில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் சுமார் ஆயிரம் கைதிகள் கொல்லப்பட்டிருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால் அரசு வானொலி 12 பேர் மட்டும் உயிரிழந்தனர் என்று அறிவித்தது. (எ)

## போலந்து நெருக்கடி!

தொடர்ந்து இடம் பெற்று வரும் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி பேச்சுக்கள் நடத்தப் போலந்து அரசு முன் வந்துள்ளது.

ஆனால் தடைசெய்யப் பட்ட சொலிடாரிட்டி தொழிற்சங்கத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்தத்தயாரில்லை என்றும் போலந்து அரசு அறிவித்தது.

## அக்யூனோவுக்கு நெருக்கடி!

பிலிப்பீன்ஸ் உப ஜனாதிபதி லோறல், கொரஸோன் அக்யூனோவுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருக்கிறார். எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி ஒன்றை அமைக்கப் போவதாக அவர் தெரிவித்திருக்கிறார். (எ)

வெளி உலகில்

தனியார் மயப்படுத்தப்பட்ட

## தொலைத் தொடர்புக் கம்பனிகளில் சேர வேண்டாம் எனக் கோரிக்கை

கொழும்பு, ஆக. 28

தனியார் மயப்படுத்தப்பட்ட தொலைத் தொடர்புக் கம்பெனியில் சேர்ந்து கொள்ளவேண்டாம் என்று தபால், தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறது.

தொலைத் தொடர்பு சேவையைத் தனியார் மயப்படுத்துவது தேசிய நலனுக்கு எதிரானது என்றும்—

தனியார் மயப்படுத்தும் அரசின்திட்டத்தை எப்பாடுபட்டும் எதிர்க்க வேண்டும். என்றும் சங்கம் உறுப்பினர்களுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனியார் மயப்படுத்தப்படும் தொலைத் தொடர்புக் கம்பெனியில் சேரும் தொலைத் தொடர்பு ஊழியர்களுக்கு 33⅓ சதவித சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் தனியார் தொலைத் தொடர்புக்கம்பெனியில் ஊழியர்கள் சேர்ந்து கொள்ளமுடியும்.

அரசு ஊழியராக இருந்து கொண்டும் தனியார் கம்பனியில் பணி புரியலாம். பின்னர் ஒரு திகதியில் அவர்கள் கம்பெனியில் சேர்ந்து கொள்ளலாம்.

—இப்படித் தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் செயலாளர் திரு. ஆர், எம். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். (ஒ-எ)

## அதிபர் பரீட்சை: விசேட பயிற்சி வகுப்பு

### தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 28

பாடசாலை அதிபர் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் யாழ். கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் நடத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது.

பிரஸ்தாப சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இதனைத் தெரிவித்தார்.

அதிபர் தரங்கள் 1, 2, 3 ஆகிய பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நடைபெறவிருப்பதால், செப்டம்பர் மாதத்தின் வார இறுதி நாட்களில் இப்பயிற்சி வகுப்புகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துவைப்பதற்கு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகத்துக்கு சங்கம் அழைப்பு விடுத்திருக்கிறது.

கல்விப் பணிப்பாளர்கள், பிரதம கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், கலாசாலை விரிவுரையாளர்கள் மற்றும் அதிபர்கள் இதில் விரிவுரையாற்றுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

மட்டக்களப்பில்

## பணம் வசூலிப்போர் மீது தீவிர கண்காணிப்பு

மட்டக்களப்பு, ஆக. 28

மட்டக்களப்புப் பகுதியில் பொது மக்கள், வர்த்தகர்களிடமிருந்து பொருள்களைக் கொள்ளையடிப்போர், பணம் வசூல் செய்வோர் மீது தீவிர கண்காணிப்பு செலுத்தப்படுகிறது.

பொதுமக்களிடமிருந்தும், வர்த்தகர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற புகார்களையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் பிரகாரம் நகர சுற்றுடலில் 10 நபர்கள் இந்திய அமைதி காக்கும் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்கள் உரிமையாளர்களிடம் பிரஜைகள் குழுவினர் மூலம் கையளிக்கப்பட்டு வருகிறது.

### ஸ்ரீராமகிருஷ்ணர் வீடியோ படம்

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பற்றியபுதிய வீடியோபடம் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சாரதாபீடம், பேலூர் மடம் இவர்களது அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

திரு ரகுநாத் கோஸ்சுவாமி தயாரித்த இப்படம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை [illegible] அன்று பருத்தித்துறை [illegible] பிக்கப்படும். (உ-சி)

## சமய நிதிகளில்

### அராலியில் பாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம் ஆக 28

அராலி-ஆவரம்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவிலில் நாளை (திங்கட்கிழமை) காலை 9-30 மணிக்கு பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

இந்நிகழ்ச்சி தொடர்பான கிரியைகள் இன்று மாலை 3-30 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகும். (உ)

### கலட்டி விநாயகர் சங்காபிஷேகம்

யாழ்ப்பணம் ஆக 28

வண் கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல உற்சவம் நாளை 29 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் 10 மணியளவில் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு 1009 சங்காபிஷேகமும் மாலை திருஊஞ்சலும் பெருமான் வீதியுலாவும் நடைபெறும்.

கிரியைகள் யாவும் வல்வை சிவ ஸ்ரீ சோ. தண்டாயுதபாணி தேசிகரால் நடத்திவைக்கப்படும். (உ-ஒ)

### கைதடியில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம். ஆக. 28

கைதடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறும்.

காலை 5. 30 மணிக்கு யாகபூஜையுடன் இன்றைய கிரியைகள் ஆரம்பமாகும்.

நண்பகல் 12. 30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், வீதியுலாவும் இடம்பெறும். (உ)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லூரானுக்கு நல்ல மலர்

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால்—
நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான்
எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி.

தெளியுமே நின் சிந்தை செல்வனருள்
பொங்கி
வளியுமே வானவரும் தானவரும்—
ஓயாமல்
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்தவெனச் சொல்லிக் கருது.

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றுள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப்—
பெருத்த
மயிலிவரும் வேலா! விமலா! வெனச்சொற்
பயிலவறு மெங்கள் பவம்.

பவம் நீங்கும் பன்னிருகை வேலா
வெனவே
தவமோங்கும் சாந்தம் பொறுமை-சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்தும் தீருமே
சினமு மடங்குமே தேர்.

தேரடியிற் சென்று தரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை-நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்.

பூஸா அரசியற் கைதிகளை

## பெலவத்தை முகாமுக்கு மாற்றுவதற்கு ஆட்சேபம்

பூஸா அரசியல் கைதிகளை பெலவத்தை தடுப்பு முகாமிற்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டுமென ஈ. பி. ஆர். எல். எப். மட்டக்களப்புப் பிராந்தியக் கமிட்டி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந் நடவடிக்கையை இலங்கை அரசின் திட்டமிட்ட செயலாக நாம் கருதுகின்றோம்.

கைதிகள் இடமாற்றம் நிறுத்தப்பட்டு இலங்கை - இந்திய ஒப்பந்தப் பிரகாரம் சகலரையும் விடுதலை செய்ய இந்தியா இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் எனக்குறிப்பிட்டுள்ளது.

மற்றுமோர் அறிக்கையில் இக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்தை ஈ. பி. ஆர். எல், எவ் ஆதரித்துள்ளது. (உ-21)

### மந்துவிலில்

சாவகச்சேரி ஆக. 28

மந்துவில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமையன்று நடைபெறவிருக்கிறது. (உ-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✱ சேட்டிங்ஸ் ✱ சூட்டிங்ஸ்
✱ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✱ றெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

# உதயன்

28 - 08 - 1988 ஞாயிற்றுக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
✱ மணிப்புரி
✱ காஞ்சிபுர ✱ பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

## அறிவித்தல்

### இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்
ஆனையிறவு

''சாதாரண உப்பு'' பைக்கட் செய்யப்பட்ட ''கழுவிய உப்பு' ஆகியவற்றின் விற்பனை சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய சகல வாடிக்கையாளர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் கீழ்க்காணும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. 'சாதாரண உப்பு'' பைக்கட் செய்யப்பட்ட ''கழுவிய உப்பு'' ஆகியவை இரண்டும் முறையே 9 : 91 என்ற விகிதாசாரத்தில் விநியோகம் செய்யப்படும்.
2. (அ) சாதாரண உப்பு (வாடிக்கையாளரின் கொள்கலன்களில்) தொன் ஒன்று ரூபா 593/-
   (ஆ) கழுவிய உப்பு (பைக்கட்டுகளில்) 500 பைக்கட்டுகளுக்கு மேற்பட்ட பைக்கற் ஒன்று ரூபா 1/55
   (இ) வழமையான பத்து தொன் உப்பு கொள்வனவு செய்வோர் ஒன்பது தொன் சாதாரண உப்பையும், 1000 பைக்கட் கழுவிய உப்பையும் கொள்வனவு செய்ய வேண்டும்.
3. மேற்கூறிய விபரங்களின்படி வேண்டிய அளவுக்குரிய வங்கி உண்டியல்களை ஒப்படைத்து கொள்வனவு கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. வங்கி உண்டியல்கள் யாவும் ''இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்'' என்று குறிப்பிடப்பட்டு ''பரந்தன் மக்கள் வங்கி'' யில் வைப்புச் செய்யக் கூடியவையாக இருத்தல் வேண்டும்.
5. 01 - 09 - 1988 தொடக்கம் மேற்படி ஒழுங்குகள் செயல்படுத்தப்படும்.
6. 31 - 08 - 1988 வரையும் பெற்றுக் கொண்ட கொள்வனவுக் கட்டளைகளுக்கு விநியோகம் செய்யாமல் இருந்தால் அவற்றிற்கும் மேற்குறிப்பிட்ட 1000 பைக்கட் கொள்வனவு செய்தல் வேண்டும்.
7. மேலும் விபரங்கள் தேவையாயின் ஆனையிறவு வடபிரதேச காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர் (வ.பி)
இலங்கை தேசிய
உப்புக் கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு.
(C 6437)

## அறிவித்தல்

இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்
ஆனையிறவு

### கேள்வி விண்ணப்பம்

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பளங்களில் உள்ள உப்புப் பாத்திகளில் இருந்து, டிராக்டர் மூலம் உப்பு ஏற்றிப் பறிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் செய்பவர்கள் வைப்புப் பணமாக, மீளளிக்கப்படக்கூடிய (500/-) ஐநூறு ரூபாவையும், மீளளிக்கப்படாத (50/-) ஐம்பது ரூபாவையும் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி:- 03-09-1988 மு. ப. 10.00 மணிவரை.

மேலதிக விபரங்களுக்கு வட பிராந்திய, இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபன காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பிரதேச முகாமையாளர் (வ.பி)
இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்,
ஆனையிறவு.
[C 6436]

வன்னி-புதியதோர் நவீன CHINESE INNSக்கு கீழ்வருவோர் சேவை புரிய

### தேவை

| | |
|---|---|
| மேற் பார்வையாளர் | 2 |
| காசாளர் | 4 |
| பரிசாரகர் (Waiters) | 6 |
| அறை பரிசாரகர் | 2 |
| சமையற்காரர் | 4 |
| சமையல் உதவியாள் | 2 |
| களஞ்சியப் பொறுப்பாளர் | 2 |

தொடர்பு:
யாழ்நகர்: **Gen. Manager**
80, Palali Road, Thirunelvely. or
**Director / Proprietor**
Chinese Inns, Vavuniya.
(6024)

## தமிழர் தாயகத்தை ஊர்ஜிதப்படுத்தும் நூல்கள் அதிகம் தேவை

### ஆணையாளர் சிவஞானம் பேச்சு

யாழ்ப்பாணம், ஆக 28

எமது பாரம்பரிய வரலாற்று உண்மைகள் மறைக்கப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் தமிழர் தாயகம் குறித்து ஊர்ஜிதமான தகவல்களைத் தரும் ''விஷ்ணுபுத்திரர் வெடியரசன்''வரலாற்று நூல் போல அதிகம் வெளிவர வேண்டும் வடக்கு கிழக்குத்தமிழர்களின் தாயகம்என்பதை சந்தேகத்துக்குஇடமின்றி எவருக்கும் நிரூபிக்க இந்த நூல்கள்தேவை''

யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இவ்வாறு கூறினார்.

விஷ்ணு புத்திரர் வெடியரசன் வரலாறு என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்றுக் காலை யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பண்டிதர் க. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் திரு. சிவஞானம் நூலை வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார்.

தமிழ் மக்களைப்பொறுத்தமட்டில் பிரதேசவாதம் மிகவும் பலமாக வேரூன்றிநிற்கிறது.

சிங்கள மக்கள் மத்தியில் அரசியல் தலைமைத்துவத்தைத் தெரிவு செய்து கொள்வதற்குப் பிரதேசவாதம் ஒரு தடையாக இருப்பதில்லை.

சிலவேளைகளில் சாதி, சமூகப் பிரச்சினைகள் தலைதூக்குவதுண்டு'' ஆனாலும் கூட எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இதுவும் உடைக்கப்படலாம்.

'1987ஆம் ஆண்டில் இடைக்கால நிர்வாகத்தை நான் ஏற்றுக் கொள்ளாததே இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இன்றைய மோதல்களுக்குக் காரணம் என்ற கருத்து ஒன்று நிலவுகிறது.

காரணம் அதுவல்ல, இடைக்கால நிர்வாக சபையில் கிழக்குப் பிரதேச தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் எவையும் வழங்கப்படவில்லை. இதனாலேயே நான் இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றார்.

கலாநிதி க. ரூபாமூர்த்தி, பேராசிரியர் கா. சிவத்தம்பி,செங்கை ஆழியான், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, பொன். பூலோகசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நூலாசிரியர் திரு ம.க. சிவப்பிரகாசம் பதிலுரை வழங்கினார். திரு. ஆ.சி. ஆறுமுகம் நன்றியுரை வழங்கினார். (ஓ-5)

### மீண்டும்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு பஸ்ஸிலும். ஒரு லொறியிலும் ஏறிக் கொண்ட பயணிகளைத் தவிர ஏனையோர் செய்வதறியாது காத்து நின்றனர்.

அந்த வேளையில் மீண்டும் ரயில் யாழ்ப்பாணம் செல்லுமென அறிவிக்கப்பட்டதாம்.

அதனை அடுத்து பயணிகள் ரயில் நிலையத்துக்கு ஓடோடிச் சென்றனர். 10-30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்ட ரயில் மாங்குளத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் அமைதிப்படையினரால் மறிக்கப்பட்டதாம்.

அந்த நேரத்தில் காட்டுப்பகுதியில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்ததாம்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் நின்றதும் ரயில் பயணம் தொடர அனுமதிக்கப்பட்டது.

ரயில் பிற்பகல் 2-15 மணியளவில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தது.

மீண்டும் ரயில் 3-15 மணியளவில் யாழ்ப்பாணதில் இருந்து சுமார் 300 பயணிகளுடன் புறப்பட்டது.

இதேவேளை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான ரயில்பாதை நெடுகிலும் அமைதிப் படையினர் காவலில் ஈடுபட்டிருந்தனர் என்று அறியவந்தது.

இதனிடையில் மன்னக்குளத்தடியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை கடந்த இரு வாரங்களாகத் தடைப்பட்டிருந்தது தெரிந்ததே.

(ஓ-க-9)

### மீன்பிடி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

குறைந்தளவுஎண்ணிக்கையில் தொழில் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தருவதற்கு பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர் என அறிய வருகிறது.

கூடியஎண்ணிக்கையில் கடல் தொழில்கள் அனுமதிக்கப்படாத பட்சத்தில் விரிவான ஒரு சாத்வீசப் போராட்டத்தை மீனவர் சமுதாயம் மேற்கொள்ள நேரலாமென குழுவில்கலந்துகொண்ட பிரதி நிதிகளில் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார் (ஓ-51)

## Jaffna College
# ADMISSIONS - 1989

**Admissions will be made only to the following Classes:**

Year I: Students born before 31-1-1984 and after 1-2-1983. (Admissions very limited)

Year VI: Students born after 1-2-1978

Year XII: Students born after 1-2-1972. Students will be selected on the results of the G. C. E. (Ordinary Level) Examinations.

Apply on forms available at the College Office on or before 30th September, 1988.

Admission tests for Year VI will be held on Saturday the 15th of October, 1988.

The interview for Year I will be held on Saturday the 5th of November, 1988 at 9-00 a. m. in the College.

**Principal**

Jaffna College
Vaddukoddai. [C-6433]

### வாரத்தில்....

தபாலகத்திற்கு அருகில் இந்தியப் படையினர் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

செவ்வாய், புதன், வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் சபாற் கட்டளைகள், காசுக்கட்டளைகளை மாற்றுவது பெறுமதி வாய்ந்த முத்திரைகளை விற்பனை செய்வது என்பது நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது (ஓ-9)

### சரக்கு.....

(1ம்பக்கத் தொடர்ச்சி)

ற்பனைநிலையத்திற்கான பொருள்களும் எடுத்து வரப்பட்டிருந்தன.

இவை இன்று விநியோகிக்கப்படும் என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சரக்கு ரயில் யாழ்ப்பாணம் வருவதுபற்றி உதயனில் ஏற்கெனவே செய்தி வெளியாகி இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-க-9)

### பூஸா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் திரு. ஆரியவன்ஸ மற்றும் நிர்வாக அதிகாரிகளும் உண்ணாவிரதிகளைப் பார்வையிட்டு அவர்களது நலன்களைக் கேட்டறிந்தனர்.

முதற்கட்ட உண்ணாவிரதத்தில் பங்கு கொண்ட மூவரில் நா. தேவராஜா, செ. வாசுதேவன் ஆகிய இருவரின் நிலை ஆபத்தானதாக உள்ளது.

இது இவ்வாறு இருக்க அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் தடுப்புக்காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவைக் கேட்டுள்ளார். (ஓ-5)

## நாளை 31 ஆம் நாள்
### நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியையும்




தென்னைமரவாடி
திரு. பாலகிருஷ்ணன்
(கப்டன் மகேந்தி)

அன்னையின் மடியில்: 31-07-1966
அநியாய அழிப்பில்: 30-07-1988

குடும்பத்தின் இளையவனாய் குல விளக்கே நீ இருந்தாய், நாட்டுக்காய்ப் புறப்பட்டு ஐந்தாண்டு உழைத்தாயே, காலன் உன்னைக் கவர்ந்தானோ. காலம் தான் சதி செய்ததோ? கண்ணிலுமோ காணவில்லை, கைக்கடனோ தீர்க்கவில்லை. எங்குதான் சென்றேன் என்று எங்கள் தம்பி கூறுயோ? நாம் எக்காலம் சென்றாலும் உன் பிஞ்சு முகம் மறவோம். உந்தன் முகம் காணாது தவிக்கின்றோம். அனைவருமே உனை நினைக்கும் பொழுதெல்லாம் எங்கள் மனம் எரியுதப்பா!

தாய், சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
பெருமக்கள், மருமக்கள்,
நண்பர்கள்.
(6051)

## கண்ணீர் அஞ்சலி



வைத்திய கலாநிதி
### சி. வ. சந்திரசேகரம்பிள்ளை
(வட்டுக்கோட்டை மேற்கு)

பாசமும், அன்புள்ளமும் கொண்டவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். என்றும் எங்கள் கண்ணீர் அஞ்சலிகள்!

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொற்கைத்துறை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

மனைவி, மக்கள்.

சிவன்கோவிலடி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (C 5312)

## மரண அறிவித்தல்கள்

### க. கோபாலகிருஷ்ணன்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த க. கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஜேர்மனியில் காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற கனகசபை நாசம்மா அவர்களின் மகனும், காலஞ்சென்ற சோமசேகரம் பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், யோகாம்பிகையின் அன்புக் கணவரும் கேதாரரூபன், தயாளரூபன், இன்பரூபன்- ஞானரூபன் ஆகியோரின் தகப்பனும், சீவரத்தின் (பிரான்ஸ்) சேதீஸ்வரன். சச்சிதானந்தன், உலகேஸ்வரி, சுந்தராம்பாள் ஆகியோரின் சகோதரனும். நாகரத்தினம் (உப தபால் அதிபர்-இறுப்பிட்டி), காலஞ்சென்ற இராசமணி, செல்வநாயகம் (பிள்ளையார் அன் கோ. சாவகச்சேரி), குலசிங்கம் (ஆசிரியர்-கிளி/புனித பற்றிமா வித்தியாலயம் - உருத்திரபுரம்), எதிர்வீரசிங்கம் (ரூபன் பான்ஸி பலஸ்- யாழ்ப்பாணம்). இந்திராணி, மன்மதராசன் (ஸ்ரீ உமா பான்ஸி பலஸ்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 28 ஆம் திகதி இன்றுஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணியளவில் கேரதீவு மயானத்தில் நடைபெறும்.

தயவு செய்து இந்த அறிவித்தலை உற்றாரும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சோ. நாகரத்தினம்.
S. P. M.
புங்குடுதீவு-6
(6028)

### திரு. தம்பிமுத்து நாகலிங்கம்
(மலேயன் பென்ஷனர், சண்டிருப்பாய்)

திரு. தம்பிமுத்து நாகலிங்கம் (மலேயன் பென்ஷனர் சண்டிருப்பாய்) 26-8-88இல் காலமானார். இவர் அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், தேம்பாமலர், இரஞ்சிதமலர், அரியமலர், தவமலர், லேபாஸ், ஜெயம் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற சங்கரப்பிள்ளை, திரு. தட்சிணாமூர்த்தி, காலம் சென்ற பஞ்சலிங்கம், திரு. தேவராஜா, உருத்திராதேவி, சர்வலோகநாயகி ஆகியோரின் அன்பு மாமனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-8-88 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் செம்பாட்டு மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல் :
மக்கள், மருமக்கள்
சண்டிருப்பாய். I. தட்சணாமூர்த்தி
(6029)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 28 08 - 1988 அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd 292/2, Navalar Road, Jaffna on Sunday 28th August 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org